ஆறுமுகம் துணை செய்யும்

# ஸ்ரீமத்
# திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்
# வரலாறு

TIRUPPORUR CITAMPARA SWAMIGAL VARALARU

---

திருவாளர், முருகன் அடி B. துரைவேலு முதலியார் etired Supervisor, G. P. O. Madras-1,) அவர்களுக்கு அறுபத் காராம் வயது தொடங்கியுள்ளமை முன்னிட்டுப் போரூர் பருமானுக்கு நன்றி செய்யும் முறையில், 20—11—'55 ன் மத ஆண்டுக் கார்த்திகைத் திங்கள் 5-ம் நாள், ந்தர் சஷ்டி ஞாயிற்றுக்கிழமையன்று, திருப்போரூர் தம்பர சுவாமிகள் திருமடத்தில் இலவச வெளியீடாக ழங்கியது.

ஆக்கியோர் :

**எம். பாலசுப்பிரமணியம், எம்.ஏ.**

39, ஆயலூர் முத்தியா முதலித் தெரு,

ஜார்ஜ் டௌன் : : சென்னை-1.

திருப்போரூர்

20—11—1955

15 SEP 1967 MADRAS
RB 874
4-55

# சம[illegible]பணம்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன், உலகோர் எலாம் உணர்ந்து ஓதற்கு எளியவனாய், முருகன் என்கின்ற திருப்பெயர் தாங்கித், திருப்போரூர் என்கின்ற திவ்விய தலத்தில் எழுந்தருளி, வழிபடுவோர் அனைவருக்கும் துன்பம் அகற்றி இன்பம் ஆற்றி விளங்குகின்றான் என்பது பிரசித்தம்.

ஆறுமுறை கிலமாகி, ஏழாம் முறையாகத் திருப்போரூர்- சிதம்பர சுவாமிகளால் புதுப்பிக்கப்பட்ட இந்தத் திருப்போரூர் என்கின்ற தெய்வத்தலம், முறையொன்றுக்கு ஐந்நூறு ஆண்டுகள் காலமாகக் கொண்டாலும், மூவாயிரம் ஆண்டுகள் காலப் பழமை உடையது என்கின்ற உண்மை தெளிவாகின்றது. இவ்வளவு தொன்மை உடைய ஒரு தலம் தெய்வீகப் பெரியார் ஒருவரால் புதுச்சத்தி பதிந்து, இன்று சிறந்துத் திகழுதல், தமிழராகிய தொல்குடிமக்கள் செய்த தவப்பயனேயாகும்.

**தொண்ட மண்டல நல் வேளாளர்** என்கின்ற பகுதியைச் சேர்ந்த நீண்ட பழைமை உடைய எங்கள் மரபின் குடும்பத்தார் யாவர்க்கும் திருப்போரூர் முருகனே குல தெய்வம். மூதாதையர் வழிபாட்டு முறைகளை மாற்ற வேண்டிய நியமம் ஒன்றும் அவசியமாக எனக்குத் தோன்றாமையால், நானும் என் குடும்பத்தாரும் போரூர் பெருமானையே இளமை முதல் இன்றுகாறும் தொழுது பசி, பிணி, பகை இன்றி வாழ்கின்றோம். அண்மையில் எனக்கு அறுபது ஆண்டு வயது மேற்பட்டமை குறித்து, இற்றை நாள் ஆன்றோர் வழக்கப்படி அறுபதாம் ஆண்டு நிறைவு விழா செய்யத் துணிந்து, அவ்விழா செய்யும் வழி, முருகனது அருளுக்கு உகந்த பெரியோர்களின் வாழ்க்கைத் திறங்களை யாவரும் அறியச் செய்தலே என்று தெளிந்து, இன்று, இங்கு, இந்நூல், இலவசவெளியீடாகத் தோன்றுமாறு செய்ய நேர்ந்தது.

69235

திருப்போரூர் என்கின்ற இந்தப் புகழோங்கும் புண்ணியத்தலத்தைத் தெய்வ ஏவலால் நமக்குப் புதுப்பித்துத் தந்தருளிய திருப்போரூர் சிதம்பர சுவாமிகளின் வரலாறு வெளியிடலே அன்றி வேறு யாது யான் நிகழ்வித்தல் கூடும்? அப்[illegible]ங்கவர் இன்றும் இந்தத் தலத்தில் தெய்வ வடிவத்தோடு இயங்கித் தலமூர்த்தியின் தூதுவராய் விளங்கிப் பற்றற அடியார்களுக்குத் தரிசனம் தருவதும் உபதேசம் செய்வதும், இடையூறு நீக்குவதும், தம் தொழிலாகக் கொண்டு நிற்கின்றார் என்று அநுபவ நுணுக்கம் உணர்ந்தோர்கள் கருதுகின்றார்கள். ஆதலால் அவரது வரலாற்றினை அவர்தம் பழையோரின் வரலாறுகளின் தொடர்பாக வைத்து நேரே அவரநுக்கிரகம் பெற்ற இரண்டாம் பட்ட மூர்த்திகளின் வரலாற்றுடன் முடித்து இவ்வாறு இந்நூல் வெளியாகின்றது. இதனை என் விருப்பத்தின்படி எழுதித்தந்தவர் எனக்கு மைத்துன உறவுகொண்ட **திருவாளர், எம். பாலசுப்பிரமணிய முதலியார் எம். ஏ.,** ஆவர். இவர் எங்கள் தொண்டை மண்டல நல் வேளாளர் மரபைச் சேர்ந்த, சைவ சித்தாந்த[illegible]வம், மகா வித்துவான், திருமயிலை-தணிகாசல முதலியார்; அத்தியாச்சிரமி பாலசரஸ்வதி, ஸ்ரீலஸ்ரீ ஞானானந்த சுவாமிகள்; மகாவித்துவான்-சூளை அப்பன் செட்டியார்; இவர்களின் மாணாக்கராகி விளங்கியிருந்த, **இலக்கண வித்துவான் பண்டிட் மாங்காடு, வடிவேல் முதலியார்,** அவர்களின் மூத்த புதல்வர். தந்தையைப் போல் மைந்தரும் தமிழறிவும், நல்லொழுக்கமும், தெய்வ பக்தியும், முருகன் வழிபாடும், திருப்போரூர் வழிபடு நியமமும் கொண்டு விளங்குகின்றார். இவரால் இந்நூல், இயற்றப்பட்டு இன்று இங்குப் பயனுறல் முருகன் திருவுள்ளம் போலும்.

**பாரொருவர்** யாதொரு வினை செய்தாலும், அ
வினைக்கு ஒரு பயன் உண்டு என்பது கலையுண்மை
ஆதலான், இங்கு இவ்வெளியீட்டினை ஆக்கிப் புகுத்

நல் வினைக்கும் ஒரு நற்பயன் உண்டு என்பது முடிபா கின்றது. அந்த நற்பயனை அடியேன் இந்தத் தல மூர்த்தி யும் எந்தன் உளமூர்த்தியுமாகிற திருமுருகன் திருவடிக் கமலங்களிலே, திரிகரண சுத்தியோடு சமர்ப்பணம் செய் கின்றேன். இந்தச் சமர்ப்பணத்தின் பயன் யையவே பரவி, மூர்த்தியின் திரு மேனியுள் ஐக்கியமாகி விளங்கும் திருப்போரூர், சிதம்பர சுவாமிகளது தெய்வ வடிவத் துள் பொருந்தி, என்றும் போல் இனியும், இத்தலத்தில் வழிபாடு புரியும் அன்பர்களுக்கு நன்மையே நிகழ்த் தட்டும் என்று எங்கள் முருகன் சீதக்களபச் செந்தா மரைப் பூக்களை வழுத்துகின்றேன்.

**இந்நூல்** ஆக்கத்துக்கும், இந் நிகழ்ச்சி நிறைவேறு தற்கும் வேண்டிய உதவிகள் யாவும் செய்துதந்த அன்பர்கள் அனைவோர்க்கும் ஆறுமுகம் துணை செய்யும். இப்பொழுது பன்னிரண்டாம் பட்ட மூர்த்திகளாக எழுந்தருளியுள்ள மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சண்முக சுவாமிகள் அவர்களுக்குத் தெய்வ பலமும் உலகியல் வளமும் பொருளாளர் உதவியும் ஆசியாளர் துணையும், நீண்ட ஆயுள் ஆரோக்கியமும் தந்து, அவர் வழியாக, இந்தத் தெய்வத்தலமும், ஆலய நிர்வகமும், மேன்மேலும் பலபல சௌகரியங்களோடு விளங்குமாறு செய்துவைப்பான் என் முருகன் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

இப்படிக்கு,

முருகன் அடி **B. துரைவேலு,**

(Retired Supervisor G. P. O. Madras-1.)

எண் 5, ஆயலூர் முத்தியா முதலித் தெரு,

ஜார்ஜ் டவுன், மதருஸ்-1.

PUBLIC LIBRARY
19 SEP 1957
MADRAS

## முன்னுரை.

“**மேல்** ஒரு வடிவை எடுத்ததே ஆகில், மேவும் இவ்வுடல் இங்கே வீழும்;—மேல் ஒரு வடிவை எடுத்ததின்றாகில், மேவும் இவ்வுடல் இங்கே வீழா;—மேல் ஒரு சிவத்தைச் சீவன் சென்று அடையும்; மேவும் இவ்வுடல் இங்குத்தானே;—மேல் ஒரு சிவத்தின் வடிவதாம்; அருளாய், வெளியதாய், உலகு கண்டிடவே”, என்று மகாசித்த மூர்த்திகள் திருக்குமாரதேவர் அவர்கள் தம் அருமருந்து போன்ற “சுத்த சாதகம்” என்னும் பெருநூலுள் காட்டியுள்ள திருநெறியே எய்தவேண்டும் என்னும் பேராசை பிடர்பிடித்து உந்தச் செய்வகை அறியாதேன், அவர் பொன்னடிப் பூம்புகழைக் கூறுதல் ஒன்றே சற்றறிவேன், இந்நூல் இவ்வாறு இன்று வெளியிடுதல் வேண்டும் என்று என் நெருங்கிய உறவினர் **முருகன் அடி B. துரைவேலு முதலியார்** அவர்கள் தம் விருப்பம் தெரிவித்ததும், கொண்ட குறிக்கோள் நிறைவேறுமாறு, அடியார் திருவுளம் கனிந்து வழி செய்வதற்கு இஃதோர் செயல் விண்ணப்பமாக அமைதல் அவர் திருவுளம் போலும் என்னும் எண்ணம் தூண்ட, என் சிற்றறிவுக்கு இயன்ற வகையில் ஈண்டு, இந்நூல் ஆக்கத்துணிந்தேன். பெரியோர் புகழே பேசுபொருள் ஆயினும், பேசுவோரும் தகவுடைய அன்பராதல் வேண்டும் என்னும் நியதி கடந்துத் தகவு இல்லாதேன் இந்நூல் செய்ய நேர்ந்தமை பிழையேயாயினும், பெரியோர் பொறுப்பர் என்றே துணிதல் கொண்டேன். மறந்தும் “சிவ” என்று ஒருகால் கூறுவோனுக்கும் மாபாதகங்களின் தீய பயன் யாவும் அறவே தீய்த்து முத்திப்பிராப்தி செய்யும் தயாவாகும் தத்துவன் அடிநாயேனுக்கும் விரும்பியது எய்த, ஒருவழி செய்வான் என்றே இது துணிந்தேன். பிழையேல், ஆன்றோர் பொறுப்பர்.

**பலபல** தலைமுறைகளாக எங்கள் மரபினோர்க்குக் குல தெய்வமாகத் திருப்போரூரில் வீற்றிருந்து, அன்றே போல் இன்றும், எம்மனோர்க்கும் யாவர்க்கும் எண்ணிய எண்ணி யாங்குத் திருவருள் சுரந்து நிற்கும் போரூர் முருகன், இங்கு, இவ்வாறு, இந்நூல் வெளியாதற்குக் காரணராக விளங்கும் அன்பர் **B துரைவேலு முதலியார்** அவர் களுக்கு இகபர சுகார்த்தங்களை இனிது நல்குவான் என்பதில் சற்றும் ஐயம் இல்லை.

ஆழப் புதைந்துள்ள அருங்கருத்துக்களை அறிய கில்லாமல், மருந்தொடு குழையும் பால் தேன் போன்ற பௌராணிக வரலாறுகளால் முட்டுப்பட்டு இளைஞர் அறி வுலகம் மிகுவேகமாய், வெறும் பகுத்தறிவு என்னும் புன் மாலை ஒளியால் லக்ஷிய நகரம் சேர முயல்வதைக் கைவிட்டு, அறிவு பகா நிலையில், அநுபவம் பிறக்கும் மூல வித்தை நெறியே ஏகிச்சாகாப் புகழ் விருப்பம் என்னும் மாநகரம் சேர்தல் விழையுமாயின், இச்சிறு நூல் அவ்விழைவின் நிறைவேற்ற முயற்சிக்கோர் உறு துணையாம்.

**எல்லாம்** செய்யவல்ல சித்தன், போரூர் முருகன், இந்நூலைக் கண்ணுறும் அன்பர்க்கும் பிறர்க்கும் வேண்டத் தக்கவை அறிந்து, வேண்ட முழுதும் தந்துத் திருவருள் செய்யுமாறு, அவன் பொன்னடிகளைச் "சரணம் சரணம் சரஹணபவ ஓம்" என்று வழுத்துவோமாக!

மா. பா.

CONNEMARA PUBLIC LIBRARY
19 SEP 1957
MADRAS

உ

ஆறுமுகம் துணை செய்யும்

# திருப்போரூர்
# சிதம்பர சுவாமிகள் திருவரலாறு.

## காப்பு

### [ ஆழத்துப் பிள்ளையார் ]

சூதான மாயையோரைத் துதிக்கையால் எடுத்து, மேலாம்
ஆதாரமான அந்த அருளினில் இருக்கவைக்கும்,
தாதாவாய், விருத்தவெற்பில் தங்கியே பிரகாசிக்கும்,
பாதாளத்தானை பாதம் பணிந்து, போற்றிடுதல், செய்வாம்.

### [ திருப்போரூர் முருகர் ]

எண்ணிலாத நெடுங்காலம், எண்ணிலாத பல பிறவி
எடுத்தே, இளைத்து, இங்கு, அவை நீங்கி, இம்மானிடத்தில் வந்துதித்து,
மண்ணின் வாழ்க்கை மெய்யாக மயங்கி உழன்றால், அடியேன் உன்
மாறாப் பெருமை தரும் பாதவனசத் துணை என்று அடைவேனே ?!
கண்ணின்மணியே! உயிர்க்களியே! கருணைப் புயலே! சுகக் கடலே!
கச்சித்தாய் உச்சியை மோந்து, கண்ணோடணைக்கும் திருத்தாளா!
புண்ணியோர் எண்ணிய கரும்பே! பொழி மும்மத வாரண முகத்தோன்
பொற்பார் துணையே! அற்புதனே! போரூர் முருகப் பெருமானே !!

### [ விருத்தாம்பிகை ]

ஊனாய், ஊழல்வேந்தனை ஆண்ட உமையே! பரையே! உயிர்க்குயிரே!
தானாய் நிகழும் சுயவொளியே! தாயே! விருத்த அம்பிகையே!
ஞானானந்தரசம் விளக்கம் ஞானசாரம் எனக் கருளி.
நானாய் நீயே என்னுடைய நாவில் நின்று உரை செய்வாய்!

## [ சபாநாயகர் ]

திங்களார் சடையில், கங்கை நீர் துளிப்பத்;
திருந்திழை உமை உளம் களிப்பப்;
பொங்கராவொடு, நற்புலி, முனிவர்கள், மால்,
போதயன், அமரர்கள், போற்றத்;
துங்க நான்மறைகள் துதித்திட; ஐந்து
தொழில் விரிந்திடப், பொதுவதனில்,
செங்கழல் அதிர, நடம் செயும் பொருளைத்;
தினம் பணிந்து, இடர் ஒழித்திடுவாம்.

## [ குரு ]

வேதாகமப் பவுரி வீசும் களாச நிலை!
ஆதார வெற்பில் அபிடேகம்!—போதத்
திருளில் எழு பானு! என தொழிவில், இன்பக்
கருணை பொழிவான், எடுத்த, கை!

## [ அடியார் ]

வண்டுழாய் அலங்கல் மாயவன்; மலர்மேல்
வதிந்த நான்முகன்; மறை; அறியாத்
தொண்டைவாய்க், கெண்டை விழிக், குழைமொழி, ஒண்
துடியிடை, உமையை; ஓர் இடத்தில்
கொண்டகோன் அருளைப், பொருள் எனக் கருதிக்,
குலவிய சாதனம் தரித்து,
மண்டிய அடியார் யாவர்; மற்றவர் தாள்,
மனத்தினும், சிரத்தினும், வைப்பாம்.

பரம்பரை முதல்வர்

# துறையூர்

# சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு.

(புலவர் புராணத்தைத் தழுவியது)

**ஐந்து** நூற்றாண்டுகளுக்கு முன்னே, தமிழகத்தின் ஒரு பகுதியிலிருந்து, ஒரு வேளாளர், **திருவண்ணாமலை** என்னும் திருப்பதியில் விளங்கும் சிவபரம்பொருளை வழிபட எண்ணி, அங்கு வந்து சேர்ந்தார். அவர் அன்றாடம் சிவலிங்க வழிபாடு செய்பவர். அவர் திருவண்ணாமலையைச் சேர்ந்த அந்நாள், அவரது சிவலிங்கப் பெட்டி காணவில்லை. அந்த அன்பர் அதனால் துயரம் அடைந்தார். முன் இரவில் தங்கியிருந்த விடுதியில் விடுபட்டிருத்தல் கூடும் என்றெண்ணி, அவர், அவ்விடத்துக்கு ஓர் ஆளைப் போக்கினார். சென்ற ஆள் மீள்வதற்குள் அடியார், "சிவலிங்கம் கிடைத்திலதேல் உயிர் துறத்தலே தகுதி" எனத் துணிந்திருந்தார். எனினும் "தளரினும் இடறினும்" உறுதுணையாஉள்ள உமைபாகன் திருவருள் இருந்தவாறு, சென்ற ஆள் பேழையுடன் திரும்பினான். திரும்பினான் உச்சி மீது உயிர்ப் பேழையைக் கண்டார்; கண்ட பேழையினுள்ளே லிங்கமூர்த்தி இருத்தலை உணர்ந்தார்; தன்னை மறந்தார்; இன்பக்கூத்து ஆடினார்; இனி உன்னை விட்டிருத்தலும் ஒல்லுங் கொல்லோ என்றரற்றினார்; லிங்கரைத் தம் மெய்ம்மீது தாங்கினாராயினார்; அவரே சைவ வீரர்; வீர சைவர்.

**இந்த** வீர சைவர், நால்வர்க்குத் தந்தையர் ஆயினார். அவர், பின்னர், **சிவப்பிரகாச சுவாமிகள், கருணைப் பிரகாச சுவாமிகள், வேலைய சுவாமிகள், பேரையூர்-சாந்தலிங்க சுவாமிகளுக்கு இல்லக் கிழத்தியாகி அமைந்த அம்மையார்** என்று பெயர் பெற்றனர்.

காலக் கழிவில் தந்தையாரை இழந்த இந்த நால்வரும் தாயாருடன் வதியும் காலத்தில், மூத்த மகனாராகிய சிவப் பிரகாசர் தமிழ்க் கல்வியில் வல்லவராகி, மேலும் அத் துறையில் நிரம்பிய புலமை கொள்ளும் ஆர்வத்தராகித் திருநெல்வேலிச் சிந்துபூந்துறை மடத்துத் தலைவராய **வெள்ளியம்பலவாண சுவாமிகளிடம்** சேர்ந்து மெய்ப் பொருள் பல அறிவாராயினர். அக்கால், அவ்வாசிரியர் பால் பகைமை பாராட்டிய ஒரு புலவனை, முப்பது செய் யுள் கொண்ட **திருச்செந்தில் நிரொட்டயமக அந்தாதி** பாடி அடக்கினர்.

**சிவப்பிரகாசர்,** பின்னர், தம் தங்கையைத் தம் இனத்தவராகிய சாந்தலிங்கம் என்றூர் ஒருவருக்குத் திரு மணம் செய்துவைத்துத் தம்பியர் இருவருக்கும் தாமே குரவராகித் தமிழ் அறிவுறுத்தி வந்தனர். அந்நாள் தம் தாயார் உடல்விட, இறுதிக் கடன் யாவும் ஆற்றிய பின்னர், தம்பியரோடும் ஊர்தோறும் சென்று அயர்வா ரானர். அஞ்ஞான்று, **அண்ணுமலை ரெட்டியார்** என் ெருரு சீரியோர் இவர் வாழ்க்கையில் நேர்ந்து, மூவர்க் கும் திருமணக்கடன் முடித்துவைக்க இசைந்தார். "பேய் கொண்டாலும் கொள்ளலாம்; பெண் கொள்ளலாகாதே", என்று கருதிய சிவப்பிரகாசர், தமக்கு மணம் கூடா தெனத் தவிர்த்து, இளவலர் இருவருக்கும் அக்கடன் முடிப்பித்தார்.

பிறகு, தான் முயற்சி வாய்ப்பு பெருகவும், சிவப் பிரகாசர், நன்னூல் சில இயற்றியருளினர். அவை, **வெங்கைக் கோவை, பழமலையந்தாதி, சோணசைல மாலை, பிரபுலிங்கலீலை** முதலியவை. அக்கால், நம் சிவப் பிரகாசருக்கும் **பாலைய தேசிகர்** என்ற சித்தர் ஒருவருக் கும் பூசல் போல்வதோர் நிகழ்ச்சி நேரிட்டது. சிவப் பிரகாசர் பாவால் தமக்கொரு மாலை வேண்டினர் பாலையர். அதனுக்கு இசையாரானர் பிரகாசர். அதனல் முருக னிடம் முறையிட்டார் பாலையர். முருகன் கட்டளையிட்

டான் பிரகாசருக்கு. அவர் தேசிகரின் பெருமையை உணர்ந்தார். "**நெஞ்சுவிடுதூது**" என்னும் பாமாலை யாத்துப் பாலையருக்குச் சூட்டினர் பிரகாசர். அன்னரும் இன்னருக்குப் பல அருள்முறைகளைப் புகட்டினர். தக்காரைத் தாமே வலிந்திழுத்து ஆட்கொண்டுச் சத்தி பதிவித்தல், தடுத்தாள் கொள்ளும் திருவாளன் ஒருவனுக்கேயன்றி, அவனை நிகர்த்த சித்தர்களுக்கும், உரிமை போலும்! அப்பால், சிவப்பிரகாசர் கடமைக் காணிக்கைகளாகப் பாலையப் பெருமானருக்குச் சில நூல்களை இயற்றி வைத்தார். அவை, **சிவஞான தேசிகர் பிள்ளைத்தமிழ், சிவஞான தேசிகர் கலம்பகம், சிவஞான தேசிகர் தாலாட்டு** முதலியவை.

**அதன்** பின்னர், சிவப்பிரகாசர், சித்து பூத்த சைவராகித் திகழ்ந்தார். இருக்கும் நாளில், **வெங்கனூர்** என்னும் ஓர் ஊரில் ஒரு மடத்தில் தங்கி வதிய நேர்ந்தது. அப்போது, அவ்வூர்க் காளியருக்குத் திருவிழா நடந்தது. அவ்விழாவில் தேர்வலம் வரும் நாளில், அக்காளியர், அம்மடத்து முருங்கை மரம் ஒன்றைக் கொய்துகொண்டு, கொடுங் களியாட்டம் செய்ய, அதனால், ஊரவர்க்கு இன்னல் உண்டாதலும், அது கண்ட சிவப்பிரகாசர் ஒரு திருப்பாடல் இயற்றியருளினர். அது,

"திருந்துதமிழ் இலக்கணஐந் திணைக்கோவை விருத்தகிரிச் செல்வற் கோதும்
பெருந்தகைமை உடையம்யாம்; விடுமோலை வெங்கனூர்ப் பிடாரி காண்க!
இரும்புவியில் ஒரு முருங்கைக் கொம்பொடியாமல் காத்திங் கிருக்கும் நீ! நம்
முருங்கைதனை வேரோடு களைந்தனை என்றால், உனக்கு முறை நன்றாமோ'.

என்பது. இப்பாவோலை உருவாகியவுடனே, காளியின் கொதிப்புக் கூம்பியொழிந்தது.

**மற்றும்** ஒரு சமயம், நம் சிவப்பிரகாச சுவாமிகள், ஒரு நகரில், வைகறை வேளையில், ஒரு மாஞ்சோலையுள் புகுந்து, அப்போது கீழே விழுந்த ஒரு மாங்கனியைச்

சிவ வழிபாட்டுப் படையலுக்காம் என்றெண்ணி எடுத்த காலை, அது கண்ணுற்ற கொடியோன் ஒருவன் சுவாமியின் திருமேனியைத் தீண்டத் துணிந்தவனுதலும், ஐயர் உள்ளம் நைந்து,

“அடுத்ததொரு தொண்டனுக்கா அந்தகனைத் தாளால்
தடுத்ததுவும் சத்தியமே யானால் — எடுத்ததொரு
மாங்கனிக்கா என்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா நித்தன்வரத் தான்”.

என்று கூறுதலும், அக்கொடியோன் இறந்து வீழ்ந்தான்.

**சிலகாலம்** கழித்துச் சிவப்பிரகாச சித்த மூர்த்திகள் **வேதாந்த சூடாமணி** என்னும் நூலை இயற்றியருளினார்கள். மேலும், தாமும் தம் தம்பியருமாகிச் சேர்ந்து, **காளத்தி மான்மியம்** என்னும் பெருநூல் ஒன்று முடித்தார்கள்.

**பின்னர்,** நம் ஐயர் சிலகாலம் வதிந்திருந்துத் தம் தம்பியருக்கும் மைத்துனராய சாந்தலிங்கருக்கும் திருவைந்தெழுத்தின் திறமெலாம் ஓதி வைத்து, **நல்லாற்றூர்** என்னும் நல்லூரிலே, ஒரு **திருக்குளத்தின்** வரம்பிலே, **வில்வமரத்தின்** நிழலிலே போய்விட்டு மெய்புகுந்தார் என்பர் அறிஞர்.

---

## துறையூர் - சிவப்பிரகாச சுவாமிகள் அநுக்கிரகம் வேண்டி விடுத்த வினு வெண்பாப் பஞ்சகம்

1

உயர்ககந வுச்சியிலே, வூடுருவிப் பாயுங்
கயமுதித் தாறுங் கடந்த—சுயமே,
சிவப்பிர காசம்: சிவப்பிர காசா!
சிவமுறச்சொல் லாயோ? யிருந்து!

2

இருந்தபடி காட்டி யிருக்கின்ற சித்தா !
மருந்தேதோ ? காட்டின், மகிழ்ந்தே—யருந்தி.
யிருந்தபடி யூன்றி யிருக்குந் திறனைப்
பொருந்துவேன் : சொல்லாயோ ? புக்கு!

3

புக்கனினை வெல்லாம் பொழிப்பா யுதிவிலையே
தக்கநிலை சார்கவென்றே, தக்கோர்சொல்—பக்குவம்;
நீவந்து காட்டாயேல், நேடி யுணர்வேனோ ?
மீவந்து, சொல்லாயோ ? மெய்!

4

மெய்யாச் சகசங்கள் மேலோர்பத் தொன்றென்றே
நொய்து நொய்துச் சென்னெறிகள் நூலறிவாப்—பெய்துரைத்தார்;
நாயடியே னாரம்பம் நாடியுணர் வேனல்லேன்;
தாயனையாய் ! சொல்லாயோ ? தந்து !

5

தந்தாயுன் றன்னைத், தாவிக்கொண் டாயென்னை,
அந்தச் சொல் யாதோ ? அருகுரைப்பீர் !—சந்ததமும்,
விந்தைமேல் விந்தையாய், வீராச னத்திருந்து,
முந்தவே சொல் லாயோ ? வுயர்வு!

## பரம்பரை இரண்டாமவர்

## பேரையூர்-சாந்தலிங்க சுவாமிகள் வரலாறு.

## (புலவர் புராணத்தைத் தழுவியது.)

**சிவப்பிரகாசருடைய** தங்கையாரின் கணவராகி இருந்த **சாந்தலிங்கர்,** சிறிது காலம் இல்லறம் வழுவாது நடத்திப், பின்னர், துறவு பூண்டு, மைத்துனரிடமே தீக்ஷையாதி பெற்று விளங்கினார். விளக்கம் துளக்க மடைதலும், ஆசிரியரது ஆணையின்படி, **பேரையூரில்** திருமடம் அமைத்துச் சைவத் சித்துநெறி தழைக்க இடமானார். அவர் எழுதிய சிறிய பெருநூல்கள் நான்கு.

அவை, கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்பன.

தம் ஆசிரியர் போன்று நம் சாந்தலிங்கர் சித்தொன்றும் செய்ததில்லை என்பர் மேலோர் எனினும், அவர் தம்முடைய மாணவர்களுள் தலைசிறந்தவராகி, விளங்கியிருந்த குமாரதேவனருக்குச் சித்தமார்க்கத்தின் திறமெலாம் விளக்கியருளியுள்ளார் என்பது, பின்னவரின் அருட்செயல்களை நோக்குங்கால் புலனாகின்றது.

கருநடநாட்டு மன்னராகித் திகழ்ந்திருந்த ஒருவருக்குத் திருவருளைக் கூட்டி வைத்துக் **குமாரதேவர்** என்று திருப்பெயரிட்டு, உலகத்துக் களித்தமை ஒன்றே, நம் சாந்தலிங்கரின் உயர்வுக்கு ஒப்பற்ற சான்றாகும். அன்றியும் குமாரதேவனருக்கு மாணாக்கராய் அமைந்த **திருப்போரூர் சிதம்பர சுவாமிகளையும்** தம் திருக்கண் நோக்கத்தால் பக்குவப் படுத்தி, அவரைத் தம் மாணாக்கருக்கு மாணாக்கராகுமாறு ஆணையிட்ட பெருமையும், நம் சாந்தலிங்கரை ஒரு மாபெரும் சித்தக் குரவர் என்று தெரியச் செய்கின்றது.

மேலும் சாந்தலிங்க சுவாமிகள், தாம் இயற்றியருளிய நான்கு நூல்களுக்கும், **சீர்காழிக் கண்ணுடைய வள்ளலார்** இயற்றியருளிப்போந்த **ஒழுவிலொடுக்கம்** என்னும் அருமருந்தன்ன பெருநூலுக்கும், தம் மாணவர் மாணவராகிய சிதம்பரனாரைக் கொண்டு, உரை இயற்றி வைத்த திருவுள்ளமும், அன்னவரின் சித்த உயர்வுக்குச் சிறந்த தனிச் சான்றாகும்.

இவ்வாறு சைவச்சித்துநெறியைத் தழைக்கச் செய்த பேரையூர் சாந்தலிங்க சுவாமிகள், அவ்வூரிலேயே, சுத்த சாதகச் சித்த நெறியின்படி ஒடுக்கத்துள் உறைவாராயினர் என்பது வரலாறு.

# பேரையூர்—சாந்தலிங்க சுவாமிகள்

## அநுக்கிரகம் வேண்டி விடுத்த

## விஞ வெண்பாப் பஞ்சகம்

1

ஊழறுத்து, வூழ்முதலில், வூண்கொள்ள, வுள்ளவிதத்
தாழறுத்துச் சாந்தலிங்கத் தாதையே! — பாழறுப்பீர்!
என்றேங்கி, யிங்குறைவேன்; என்றருள் செய்வீரோ?
இன்றெனக்குச் சொல்லீர்; எழுந்து!

2

எழுந்துநீர் சொல்லீரேல், என்கதிதான் யாதோ?
கொழுந்துசுத்த சாதகமே கோத்துப் — பழுத்துவிட,
நாயடியேன் புன்வாழ்வில் நாயகரே! செய்வீரோ?
ஆயமுதல் சொல்லீர்; ஐயகோ!

3

ஐயகோ!என் செய்வேன்? ஐயபித்த வாதம்,
பையவேஎன் பையுள், பழகிமிகத் — தீயனவே
செய்கின்ற; என்றவைதாம் சென்றொழியச் செய்வீரோ?
உய்யவே, சொல்லீர்: உதித்து!

4

உதித்தருளி, என்னுணர்வுள், ஓமயமாய், மேலும்
கதித்தருளிச், சோபான கம்பம் — குதித்தேற;
நற்றிற மெல்லாம் நயந்தெனக்குச் செய்வீரோ?
உற்றின்னே, சொல்லீர்: உவந்து!

5

உவந்ததுறை ஒன்றின்மேல் ஒன்று யடுக்கி
பவந்தன்னின் உச்சிமீது பாய்ந்தே — நவநவமா
ஆக்கிக்காத் துப்போக்கும் அற்புதம் செய்வீரோ?
ஊக்கமுறச் சொல்லீர் உழைப்பு!

### பரம்பரை மூன்றுமவர்

## விருத்தாசலம்-குமாரதேவ சுவாமிகள் வரலாறு.

(புலவர் புராணமும் பிறவும் தழுவியது)

**சிவத்தொடு** கலந்த சாந்தலிங்க சுவாமிகள் பேரையூரில் தங்கிச் சைவச்சித்துநெறியைத் தக்கபக்குவ மாணுக்கர்களுக்குப் பயில்வித்தபோது, அவரிடம் அந்நெறியின் அரும்பெரும் நுணுக்கங்களை எல்லாம் ஆழ்ந்தும் அகன்றும் அறிந்துப் பழகியவர் நம் **குமாரதேவர்** என்னும் தலை மாணுக்கர். அவர் முன்னர் கருநடநாட்டு மன்னராகி இருந்தவர். எனினும் பிறவிதோறும் பேணி வளர்த்த சைவநெறியின் திறத்தால் அரியணை நீங்கிக் குருபதம் அடைந்தார். அடைந்தாரை ஆசிரியர் லிங்கனர் சுத்த சாதகச் சித்தியர் ஆக்கிய பிறகு, தம்மைப் பிரிந்து சென்று தமக்கு இனிக்கும் இடத்தே இருந்து இயைந்தவாறு பணி செய்யக் கட்டளையிட்டருளினர். அத்திருக் கட்டளையைத் தம் உச்சிமேற் கொண்டு. குமாரதேவப் பெருந்தகையார் ஊர்தோறும் இயங்கி வந்த காலத்தே **திருவாரூர்** திருநகரில் தங்க நேர்ந்தது. ஆரூரான் தேரேறித் திருவீதிவலம் வந்தான் திருவிழாவில் ஒருநாள். அக்காட்சியினை நின்று சுவைத்திருந்த நம் தேவனரை ஒரு பக்குவமில்லான் கண்டு, வீரசைவக் கோலத்தைக் குறித்து, எள்ளி உரையாடி நகை செய்தானுக, ஆரூரான் திருவுள்ளம் இருந்தவாறு, நம் அடியாரது திருவுள்ளத்தே வெகுளி ஒன்று உருவாகி ஒரு கட்டளையாகப் பிறந்தது. **"எம் குருவாணை! வீரசைவம் மருளானால் நின் தேர் நடக்க; இல்லையேல் நிற்க; தேரூரும் ஆரூரா!"** என்று முழங்கினர் தேவனர். தேரும் நிலைத்து நின்றுவிட்டது அன்பர்கள் யாவரும் பெருமுயற்சி செய்தும் தேர் இம்மியளவும் அசையவில்லை. தகுந்தோர் மன்னனிடம் ஓடிச் சென்று, செய்தியைத் தெரிவித்தனர். தேர்வலம் முடிந்த பிறகே ஒரு போது உணவு கொள்ளும் விரத மாண்பினை ஏற்றிருந்த மன்னன், இவ்விடையூற்றினுக்கு ஏதும்

காரணம் தெரியானாகிக், காரியம் முடிக்கவல்ல செயலும் ஓரானாகி, ஓடோடியும் திருவீதிவந்து சேர்ந்து, அங்குற்றாருள் சிலர் கூற, இன்னாரால் இத்தடை இயல்வதாயிற்று என்று அறிந்து, உள்ளம் நைந்தவனாகி, அச்சம் தலைசூழ, மெய் விதிர்விதிர்த்து, நாவும் எழாமல், கரசரணம் சோர்ந்து, அப்பால் ஓர்பால் அமர்ந்திருந்த குமாரதேவப் பெருமூர்த்தியின் திருவடியின்பாலே அடியற்ற நெடுமரம் போல் முடிசாய்த்துச், சொல்வகை ஒன்றும் முயன்றிலனாய்ப் புலம்பலுற்றான். கண்டார் தேவதேவனது அடியாராய தேவனார்: உளம் இளகினார். உமைபாகன் திருவருள் அக்கணம் இயக்குதலும் மீண்டும் ஒரு கட்டளை அச்சித்தமூர்த்தியின்பால் உதித்தொலித்தது. "**தேரூரும் ஆரூரா! வீரசைவம் அருளானால் நின்தேர் நடக்க; இல்லையேல் நிற்க; எம் குருவாணை!**" என்ற ஓசை சிற்றம்பலத்தே உருவாகிப் பேரம்பலத்தே பாய்தலும் தூங்கியிருந்த தேர் தலைவனோடே விழித்தெழுந்தாற் போலே துணுக்குற்று அன்பர் குழாம் அனைத்தும் கண்ணீர் ததும்ப, அரகரத்துதியோசை வானம் பிளக்கவும், கரங்கொட்டோசை எண்டிசை எதிர் ஒலிக்கவும், எம் ஐயன், ஏழை பங்கன், ஓயாக் கூத்தன் அன்புளம் இருந்தவாறு, ஏறுபோல் புறப்பட்டு, வீறுநடையுடன், மீறுவேகமாகி, ஒடிநிலை நின்றது.

**பின்னர்** தம்வழியே செல்லப்புறப்பட்ட தேவனாரைப் பாதம் தொட்டு, மன்னன், தன் எல்லையுள் சிலகாலம் வதியுமாறு விண்ணப்பம் செய்துகொள்ளலும், மூர்த்திகள் நின்றநிலையில் திருவருளின் குறிப்புவேண்டி பரத்தொடு பக்குவப்படுதலும் "திருமுதுகுன்று செல்வீர்!" என்ற தெய்வக்கட்டளை பிறத்தலும், அவ்வுயர்ந்தோர், மன்னன் செய்த வேண்டுகோளைப் புறக்கணித்து மேற் செல்வாராயினர்.

**வழிசெல்வார்** உடல் துன்பம் சூழ்தலும், அதனுக்கு இடம் கொடாமல் மேல் நோக்கியே மெல்லடி வைத்து,

மித நடையாக வழி கடக்கும் வேளையிலே, உலகெலாம் உணர்ந்தோதற்கரியன், தோடுடைய செவியன், பிறை சூடிய பித்தன், தொண்டர்க்காத் தூது சென்ற தூயோன், நம் அடியார் படும் துயரைச் சகியாதவனாகி, அன்றோர் கால் திருவாசகத் தெய்வத்துக்குப் பரிந்துப் பிட்டுக்கிழவி யின் பங்குக்கா மண்சுமந்த திருக்கோலத்தின் முதற் பொருளில் கினைத்த மூவா வடிவம் ஒன்றேந்திச், சாலை வழியே ஒரு சிறு தண்ணீர்ப்பந்தர் அமைத்து, அதன் கண்ணே நால்வகை நீர்க்குடமும் நிறுத்திப் பந்தர்ப்பார்ப் பான் போலே அமைந்து, அடியார் வருகைக்குக் காத்துக் கிடந்தான். கிடந்தானேனும் காத்தற்கு இயலானாகி, அடியாரை நோக்கி எதிர் நடந்து, அவரது கைப்பற்றித் துணையா உடன்நடந்து கொண்டு வந்து உபசாரம் செய்து, நீரருந்தச் செய்து, அயர்வு நீங்கச் செய்து, வழிமேல் ஏகச் செய்தான்.

இவ்வாறு முழுமுதற் பொருளே பக்குவப் படுத்திச் செலுத்திய பேறுபெற்ற சித்தமூர்த்திகள் நடையா நடந்து, மணி முத்தா நதி தீரம் சேர்ந்து, ஆங்கோர் மரநிழலில் களைத்துக் கிடந்தார்: கிடந்தாருக்கு உப சாரம் செய்யும்பேறு, தம் கணவனாருக்குக் கிட்டியது போலத், தமக்கும் நேர்வதாயிற்றே என்று மிகுமகிழ்ச்சி பொங்கப் பெரிய நாயகியாம் அரிய நாயகி, துரியநாயகி, அபிராமி பட்டருக்கு அபயம் தந்த நாயகி, காளமேகனுக் குத் தம்பல வரதம் தந்த நாயகி, குமரகுருபரனாருக்கு உவந்தருளி எழுந்தருளிய பிரபந்த நாயகி, அடிநோக, இடை ஒல்க, முடி மிளிர, கடைக்கண் புந்நகை பூப்ப, செவ்வதரம் தேனொழுக, செங்கரங்கள் அபயவரதம் புலப் படுத்தக், கொடியொன்று, துவண்டு துவண்டு, நடம் பயின்று முன்னேக்கிப் படர்தல் போல், பரச்சுழலை விட் டிறங்கிப் பையவே, நிலமதிராமல், ஒரு கை ஓர் பொற் கிண்ணம் தாங்க, மற்றோர் கை சூலமேந்தி, வந்தாள்; எம் ஐயனாரை நோக்கி! வந்தவளும் குமாரதேவனார் திருச்

சிரத்தைத் தம் அடிமீது வைத்துத் தான் உடன்கொண்டு வந்த பொன்வட்டிலில் சித்தசித்தி அமிர்தத்துடன் பக்தி சித்தி அமிர்தத்தையும் சேர்த்துக் குழைத்ததோர் உணுப் போலே ஒன்றைத் தோன்றச் செய்து, முன்னோர் நாள், திருச்சீர்காழியில் திருஞான சம்பந்தச் செஞ்சேவற்கதிப னுக்குத் திருக்குளத்துப் படித்துறைமேல் பசித்தகாலை புசிப்புப்பால் திருமுலைசுரந்தும் கனிவுப்பால் திருநயனம் சுரந்தும் ஊட்டியமை போல், தவவடியார் திருவதரம் விலக்கிப் புகட்டுவாராயினர். ஆயின காலை அன்பர் உடற் களைப்பும் உயிர்க்களைப்பும், சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து அருள் உதித்த திரு விளக்கத்தால் அறவே போய்ச் சோபான அநுபவநெறியின் மேல்நிலை யில் பரிபூரண அவசத்தில் விழிப்பெய்தி எழுவாராயினர். அக்கால் அப்பரிபூரணத்தில் தேவியாரது வடிவ வரம்பு தோன்றவும், தெய்வக்குமாரதேவனர், நினைவு நிலை எய்தி அம் மங்கல மாவடிவை ஐந்து பேரறிவும் கண்களேயாகக் கண்டு, அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக ஓர்ந்து மீண்டும் ஒமயமாகினர். ஆயினரை அம்மையார் உலகயூகுள் இறக்கி "ஈண்டு வதிதல் செய்வாய்! எம் பரிவு என்றும் நின்பால் நிலவும்" என்றிசைத்துப் பிரமத்துள் கரந்தார்.

**அதன்** பின்னர் நம் குமாரதேவ சுவாமிகள், விருத் தாசலத்தில் தங்கி, சிவசத்தியின் திறத்தால், அங்கலிங்க ஐக்கிய முத்திநெறி நோக்கி நடப்பார், தம்மரபின் சோபான மார்க்கத்தை உலகோர் தெரிந்து உய்யுமாறு திருவுளம் கொண்டு, தம் பொருண்மையுள் பெரியநாயகி யாரே பொருந்த நின்று விளங்கிப் பதினறு பெருநூல்கள் இயற்றியருளினர்கள். அவை, **மகாராஜா துறவு, சுத்த சாதகம், விஞ்ஞான சாரம், அத்துவித உண்மை, பிரமானுபூதி விளக்கம், ஞான அம்மானை, வேதாந்த தசாவத்தைக் கட்டளைச் சுருக்கம், வேதாந்த தசகாரியக் கட்டளை, சகச நிட்டை, உபதேச சித்தாந்தக் கட்டளை,**

பிரமசித்தியகவல், சிவதரிசன அகவல், ஆகமநெறி யகவல், வேதநெறி யகவல், பிரமானுபவ அகவல், சிவசமரசவாத அகவல் என்பன.

**மேல்,** நம் தேவனார் பற்பல அவசரங்களிலே பற்பல அற்புதச் சித்துக்கள் நேர்தற்குக் காரணராய் விளங்கினார். ஒருகால், ஐயனாரை நாள்தோறும் கண்டு சென்ற விரதப் பெருமையால், செல்வம் கொழித்த ஒரு குடும்பி, அந்தச் செல்வத்தால் செயற்பாலதாம் அறன் யாதென மூர்த்திகளைப் பணிந்து விண்ணப்பம் செய்தலும், அவரும் தேவியாலயத்தின் திருமுன்னர் ஒரு திருமண்டபம் அமைத்து வைப்பாய், என்னலும், அவனும் அவ்விதமே செய்து வரும்போது, உத்தரக்கல் மேலேறாமல் தடையாக, அஃதறிந்த தேவனார் திருநீறு தந்து, அதனை மேல் தூவிக் கல்லை எழுப்பப் பணித்தாராக, அவன் அவ்வாறே செய்விக்குங்கால், அக்கல் எளிதில் தந்நிலை பொருந்தியது. பின்னர்க் கோபுர வாயிலில் முதுகு உரைபட்டிருந்த இரு துவார பாலகருக்கும் தவன கஞ்சி படைத்து உரைப்பினைப் போக்கியருளினார் நம் தேவர்.

**ஒருகால்** விருத்தாசலத்து வடவெல்லைத் துர்க்கை நம் ஐயனார் எதிரே தோன்றித் தன்னை அடக்கிக் கொண்டு போக ஒரு மந்திரத்தன் வருகின்றான் என்று குறை கூறி முறை வேண்டுதலும், தேவனார், தம்மிடம், துர்க்கை வேண்டுவது யாதென வினவித் தெரிந்து, இரக்க மேலீட்டால், துர்க்கையின் கோயிலுள் நுழைந்து, அந்தத் துர்க்கைச் சிலையின் மீதுத் தம் திருவடியைத் தூக்கித் தீண்டுதலும், வழி நோக்கி வந்து கொண்டிருந்த மந்திரத்தன் திடுமென இரண்டு கண்ணும் பார்வை நீங்கியவனாகி, இத் துன்பம் நேர்ந்தமைக்குக் காரணம் ஒரு சித்து வல்லாரின் சினமேயாகல் வேண்டும் என்றுத் தீர்மானித்துத் தன் குற்றம் உணர்ந்த தெளிவினனாகி, நோ நடத்தல் ஒல்லாமல், வீழ்ந்தும், புரண்டும், அலறியும், பதறியும், எதிருற்றாரை எல்லாம் "எங்கேவரேனும் பெரியோர் உளரோ?"

என்று கேட்டு கேட்டு விசாரித்துக் கொண்டே, நெடுவழி கடந்து, ஐயனுர் திருமுன்னர் வந்து சேர்ந்து, அவர் திருவடியின்கீழ் வீழ்ந்தானை, நம் தேவர், இனி மந்திர ஆற்றலால் தீயநெறி புகுதல் கூடாதெனக் கட்டளை இட்டு, அவனுக்கு ஒரு கண் புலனும்படித் திருவருள் செய்தார்.

**மற்ருெரு** கால், நம் தேவனுரை வழிபட்டு வந்த ஒரு குட்ட நோயான், அந்நோய் தீராமையால் மிகு துன்பத்துக்கு ஆளாகித் தேவனுரிடம் முறை செய்துகொள்ள, அவரும் அவனுக்குத் திரு நீறு அளித்து, "இதனுடன் ஆலயத்து மூலவர் கர்ப்பக் கிரகச் சுற்றுச்சுவர் மாடத்தில் நின்றுள்ள விநாயகச் சிலையிடத்தே சிறிது நேரம் இருந்து வருவாய்" என்று கட்டளை செய்யவும், அவனும் அப்படியே சென்று இருந்தபோது, மெய்ம்மயக்கம் தோன்ற, அம்மயக்கத்தினூடே, மாடத்து விநாயகப் பரம்பொருள், தம் துதிக்கையால் திருநீறேந்திய தன்கைகளைத் தொடுதல் போல் ஓர் உணர்ச்சி பெற்று, மயக்கம் தீர்ந்து, மீண்டும் ஐயனுரிடம் போந்து, நடந்தது கூற, அவரும் "இத் திரு நீற்றினைப் பூசிவர நின்நோய் நீங்கும்", என்று திருவருள் செய்யவும், அவனும் அவ்விதமே செய்து அக் குட்டம் அறவே ஒழியப் பெற்ருன்.

**அப்பால்,** அண்மையில் ஓர் ஊரில் வசித்திருந்த நல்லார் ஒரு ரெட்டியார் தம் மனைவியுடன் வந்துத் தேவனுரை வழிபட்டு, மக்கட்பேறில்லாத குறையை விண்ணப்பம் செய்துகொள்ளுதலும், நம் ஐயனுர் அவர்கள் இருவர்க்கும் திருநீறு அளித்து, "இனி உம் குறை தீரும்" எனத் திருவருள் செய்த பின்னர், அவ்வம்மையார் காலப்போக்கில் சிலமக்களுக்கு அன்னையார் ஆயினுர். நம் தேவனுர் தம் குரவனுராய சாந்தலிங்க சுவாமிகளைக் கண்டுவரச் செல்லும்போதெல்லாம் வழியில் இந்த ரெட்டியாரது திருமனையில் தங்கி அமுதுண்டு செல்லும் திருவுள்ளத்தராய் இருந்த காலத்து, ஓர் கால், அவ்விதம் சென்றபோது; ரெட்டியாருடைய மக்களுக்குத் தமிழ் அறிவுறுத்திக்

கொண்டிருந்த சிதம்பரக்கவிராஜரது பக்குவத்தை ஓர்ந்து, அவரைத் தம் சுத்தசாதகச்சித்து மார்க்கத்தில் சேர்த்தருள்செய்யத் திருவுள்ளம் கொண்டு, அவரை ஒரு கேள்வி கேட்டதும், கல்விக்கடலாய கவிஞர் கரணம் யாவும் கட்டுப்பட்டு, யாதொன்றும் பேச இயலார் ஆயினர். ஆயினும் தாம் செய்திருந்த முன்னைப் பெருந்தவம் ஈண்டு நுண்ணிதில் வந்து பொருந்தவும், தாம் இதுகாறும் எதிர் நோக்கியிருந்த தம் குருவின் திருமுன்னர் தத்துவங் கழன்று நிற்கும் பக்குவத்தை ஓர்ந்துணர்ந்துத், தேவனார் வழிசெல்லுங்கால், அவர் பின்னே, தாய் பின் செல்லும் ஆன்சேய் போல் நடப்பாராயினர். தொடர்ந்து பின் வந்த சிதம்பரனாரைக் குமாரதேவர் தம் ஆசிரியரது பக்குவப்பார்வைக்கு ஆளாக்கி வைத்ததும், சாந்தலிங்கர், தாம் திருவாய்மலர்ந்தருளிச் செய்திருந்த நான்கு நூல்களையும் **ஒழிவில்ஒடுக்கம்** என்னும் பெருநூலையும் கவிராஜரது திருக்கரத்தில் தந்து, அவற்றினுக்கு மூலவர் கருத்துக்கிசைந்த உரை காணுமாறு கட்டளை செய்தார். மேலும் அக்கவிஞருக்குத் திருநெறி காட்டும் தெய்வக் கடனைக் குமாரதேவர் தாமே ஆற்றுதற் கடனும் என்றும் பணித்தார். அப்பணியை உச்சிமேற்கொண்ட தேவனார், கவிஞருடன் தம்மிடம் மீண்டு, அவருக்கு ஒல்லையில் தம் திறனெலாம் பதியும் வண்ணம் திருவருள் செய்யவும் சிதம்பரனார் விரைவில் சுவாநுபூதிச் செல்வராகி, முதலாசிரியர் கட்டளையின்படி நூல்கள் ஐந்தினுக்கும் திருவுரை இயற்றி அவர்தம் இசைவும் பெற்று விளங்கினர்.

**அப்பால்** நம் குமாரதேவ சுவாமிகள் விருத்தாசலத்திலேயே தங்கி சிற்சில சித்துகளையும் நேர்வித்துத் தம் தலைமாணாக்கராய சிதம்பர சுவாமிகளுக்குப் பூரண அநுக்கிரகம் செய்து ஓர் லிங்கமூர்த்தியின் இடமாகத் தம் சுத்த சாதகத் திறனால் திருவுருக் கரந்தனர். அந்த லிங்க மூர்த்தியைக் கொண்டு ஆங்கு அன்றெழுந்த மடாலயம் இன்றும் சிறப்புடன் விளங்குகின்றது.

## விருத்தாசலம் குமாரதேவ சுவாமிகள்
## அநுக்கிரகம் வேண்டி விடுத்த
## வினு வெண்பாப் பதிகம்

1

சுத்தசாத கத்தோர் சுவாநுபவச் சித்தியெல்லாம்,
நித்தம் நெகிழ்ந்து, நிமலமதா, — மெத்தவே,
சீர்குமார தேவேநீர்! சித்தம் களிகூர்ந்துத்,
தேர்தரச் செய்யீரோ?! சேர்ந்து.

2

சேர்ந்துவாசம் இக்குடிலுள், சேரா தவமெலாம்,
சோர்ந்துபோகா மல்யான், நீர் சொல்நெறியே, — ஊர்ந்துவிரை
வூடனேக மான உழைபுரை மேற்புரைக்
கூடதேகச், செய்யீரோ?! கூடி.

3

கூடி நிட்டை, யான்குலவக், கூடா தழிகின்றேன்;
தேடியிங்கே, நின்னருள்தான் தேங்கிவிடில், — நாடியதை,
நட்டநடு வாக்கொண்டு, நாயகரே! மேலேற,
வட்டமது, செய்யீரோ?! வந்து.

4

வந்துணர்த்தி, வாய்க்கால் வழியெல்லாம்; வஞ்சகசம்
முந்துவழி, தான்சேர்த்து; முற்றும்யான் — பந்தநிலை
விட்டேறிச், சொந்தநிலை வீடதனுள் வீற்றிருக்கக்;
கட்டோடு, செய்யீரோ?! கண்டு.

5

கண்டவிதம் மெய்ச்சகசம் காட்டை யுணர்மௌனம்
கொண்டவர்கள், யான்காணக் கொண்டேனேச், — சண்டனிடம்
காட்டாமல், சையோகங் கட்டில் கணவனுடன்
கூட்டமிடச், செய்யீரோ?! கூர்த்து.

6

கூர்த்தமதி கொண்டோரும், குற்றமற்ற மாதவரும்,
சேர்த்தொருவர் வையாக்கால், சீர்சகசப் — பேர்த்தநெறி
ஆர்த்திடுதல் ஆகா: அழைக்கின்றேன்! ஆதலினல்,
ஊர்த்தமுகம் செய்யீரோ?! ஊன்.

7

ஊன்விட்டு, உன்னும் உளம் விட்டு, மேன் மேலும்
தான் விட்டுத், தங்கும் தழையுணர்வும் — ஏன்விட்டு,
உய்யாமல்; யானழிதல் உட்பட்டேன்? துய்யாவோ!
மெய்யாகம் செய்யீரோ ?! மேவி.

8

மேவியென் ஓயா மிடல்புலன் யாதுடனும்;
தாவியென் சாயாத் தழைபொறி ; — ஆவியுடன்;
சோர்வதனைச் செல்வித்துச், சூழச் சகசமெலாம்,
ஓர்வழிச் செய்யீரோ?! உற்று.

9

உற்றதானே தானும், ஒழிவில் ஒடுக்கத்துள்;
இற்றுநானே நானுய், இகழச்சியெலாம்; — செற்றுப்
பொருள் சொல்லும், கண்ணுயிரும், போதபரமும்; மேல்
தெருள்நெறி, செய்யீரோ?! சேர்வு!.

10

சேர்ந்தகன்றும் பன்றியுடன், செம்மை வழிமறந்து,
பீர்ச்சமலம் தின்னுதல்போல்; பேயனேன்—கார்த்தமலப்
பீழை யிலேபுழுவாப், பின்னி நெளிகின்றேன்;
சூழறவேச், செய்யீரோ?! சூது.

---

## துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் பரம்பரையில் நான்காமவர், தம் பரம்பரை முதல்வர்.

## திருப்போரூர்—சிதம்பர சுவாமிகள் வரலாறு.

(அஷ்டாவதானம் - சபாபதி முதலியார் எழுத்தைத் தழுவியது.)

என்றுமுள தென்தமிழ் என்று அறிஞர்களால் பாராட்டப்படும் நம் தமிழைச் சங்கம நிறுத்தி வளர்த்து வைத்த பாண்டிய நாட்டு வேந்தர்களின் தலைநகராய்ச் சிறப்பு ஓங்கியிருந்த மதுரையிலே, சங்கப்புலவர் ஒருவர் மரபிலே தோன்றியவர் சிதம்பரக் கவிராஜர். இவர் விருத்தாசலத்துக்கு அருகே, அக்கால் விளங்கியிருந்த ஓர் ஊரிலே அறம் வளர்த்து வந்த ஒரு ரெட்டியாரின தவப் புதல்வர்களுக்கு மொழிக்கல்வி கற்பித்து வந்த காலததில், ஒரு சமயம், அந்த ரெட்டியாரின் திருமனைக்கு எழுந் தருளிய குமாரதேவ சுவாமிகளால் வலிந்து ஆட்கொள் ளப்பட்ட விதம் பூர்வ புண்ணியப் பயனேயாம். ரெட்டி யாரது இல்லத்துக்கு எழுந்தருளிய குமாரதேவர் நம் கவி ராஜரது தோற்றப் பொலிவைக் கண்டு உளம் கனிந் தனரோ? அல்லது அவர் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லுங்கால் எழுப்பிய தமிழோசையினுள்ளே பொதிந்து கிடந்த கனிவுள்ளத்தின் செயற்பாட்டால் சிந்தை மகிழ்ந்தனரோ? அல்லது கவிராஜரது பாட போதனையில் மிளிர்ந்திருந்த அருள் வேட்கையின் ஆழத் தை அறிந்து மனம் நெகிழ்ந்தனரோ? யாதும் யாம் அறி தற்கில்லை. சித்த மார்க்கத்தில் ஈடுபட்டுள்ள சிரியோர்க்கே புலனும், ஏதோ ஒரு குறிப்பைக் கவிராஜரிடத்தே உணர்ந்தே குமாரதேவப் பெரியார் அன்னவரைத் தம் தயாநோக்கத்தினுல் குழைவித்துத் தம் குருதேவரின் கிருபா நோக்கத்தால் உருவேற்றித் தம் போதனையால் சுத்த சாதகச்சித்தி பொருந்தச் செய்தார் என்பது மிகையன்று.

**ரெட்டியார்** இல்லத்தில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லி யிருந்த கவிராஜரை நேர்நோக்கிக் குமாரதேவர் கேள்வி ஒன்று விடுத்ததும், அதனுக்கு அக்கவிஞர் விடை கூறும் ஆற்றல் அற்றவராகி வாளா கிடந்துப் பின்னர், தேவனுரைத் தொடர்ந்து சென்று, சாந்தலிங்க சுவாமிகளது திருமடத்தைச் சேர்ந்தார். அது போது புன்காலை. லிங்கனர் ஒடுக்கத்துள் உறைந்திருத்தல் அறிந்துத் தேவனர், உட்புகாமல் வெளியே நின்றவர், திருமெழுகு கொண்டு திருவீதியில் துப்புரவு செய்தலும், பின்னிருந்த கவிராஜர், திருவலகு கொண்டு மேல் திருக் கோலம் அமைத்தார். லிங்கனர் ஒடுக்கம் விரிந்து விழித் தமை தெரிந்துத் தேவனர் உள்ளே புகவும், கவிராஜர் பின்னேயே தொடர்ந்தார். "பின்னவன் யாவன்?" என்ன முன்னவரை முதியோர் கேட்க, "இவ்விடத்துக் கெனக் கிடைத்த காணிக்கை" என்று முன்னவர் கூற, "இவன் திறம் யாது" என அன்னவர் மீண்டும் வினவ, முன்னவர் "இவன் தமிழ் வல்லான்" என்று விடை கூறி, மேலும் "தம் பாதச் சேவைக்குத் தகுந்தான் போலும்" என்று மேற்சென்று சொல்ல, மாணவர் குறிப்பை அறிந்த லிங்கனர் தாம் இயற்றிவைத்திருந்த, **கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார்** என்னும் நான்கு நூல் களுடன் சீர்காழிக் **கண்ணுடைய வள்ளலார்** செய்துப் போந்த **ஒழிவில் ஒடுக்கத்தையும்** எடுத்து வந்துக் கவிஞர் திருக்கரத்தே இட்டு, 'இவை ஐந்தினுக்கும் முதலாசிரியர் மரபறிந்து உரை செய்வாய்' என்று அநுக்கிரகம் செய்ததும், கவிராஜர், "இது செய்யும் தகுதி எம்மிடத்தே உளதோ" என்று அலமந்தாராயி னும், யாதொன்றும் தடுத்துச் சொல்ல ஒல்லாராகி, நாற்கட்டுகளைப் பெற்று உச்சிமீது வைத்துச் சும்மா நின் றுரை, லிங்கனர் நோக்கித், தேவனுரைச் சுட்டி "இவனை நின் மகனாகக் கொண்டு, நினக்கு யாம் சொல்லிவைத்த அவையெல்லாம் நீ இவனுக்குச் சொல்லி வை" என்று

கனிந்தாராக, தேவனாரும் உத்தரம் ஒன்றும் சொல்லாமல் விடைபெற்று ஏகினர், தம் நவ மாணாக்கர் தம் பின் தொடர. என்ன பேறு? தேவனாரை ஆசிரியராகக் கொள்ளச் சிதம்பரனார் தேடியிருந்த புண்ணியக் கருவூலமும், சிதம்பரனாரைத் தம் மாணாக்கராப் பெறுதற்குக் குமாரதேவனார் தேடியிருந்த சேவைப் பயனும் ஒன்றற்கொன்று தோலாது துலைபோல் சமனாயின போலும்! அலகிலா விளையாட்டுடையான் என்றும் ஆகமமாகி நின்று அண்ணிப்பான் என்றும் கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின் நோக்கரிய நோக்கென்றும் நுணுக்கரிய நுண்ணுணர் வென்றும் பெரியோரால் விதந்து பேசப்படும் புண்ணியோர் எண்ணிய கரும்பு, ஆங்கு அம்மூவர் மாட்டும் கருத்தினிப்பும் சொல்லினிப்பும் செயலினிப்பும் வழங்குவதாயிற்று, இந்நன்றி என்று தருங்கொல் என்று எண்ணாமல், என்றே ஆன்றோர் கருதுவர் போலும்!

**விருத்தாசலம்** மீண்ட குமாரதேவனார் தமக்குத் தம் குரவனார் செய்து வைத்தவை யாவுடனும் சொல்லிவைத்தவை யாவும் சேர்த்துத் தம் கனிவுடன் குழைத்துத் தம் மாணாக்கக் கவிராஜருக்குச் செய்தும் சொல்லியும் வைத்திடவும், சிதம்பர சுவாமிகள் சித்திநெறிப் பாதையிலே மிகு வேகமாய்ச் செல்வாரானார். அவ்வாறு செல்வார் அநுபவ மார்க்கத்தில், சொரூப சகசத்தில், மயில் ஒன்று அடுத்தடுத்துக் காண்டலும், அதன் கருத்து பற்றித் தேவனாரிடம் விண்ணப்பம் செய்து கொள்ள, அவரும் "நின் பழைய உபாசனா மூர்த்தியாய மதுரை மீனாக்ஷி அம்மையாரிடம் சென்று தெளிவாய்", என்று கட்டளை செய்து மதுரைக்குச் செலுத்தினர். சென்று மதுரை சேர்ந்த சிதம்பரனார் ஒரு மண்டலம், உச்சி ஒரு பொழுது, ஒருபிடி அருகம்புல்லும் மூன்று கையளவு பொற்றாமரைத் தீர்த்தமும் அருந்தி விரதசமாதியுள் புகுந்தபோது, உடல் துன்பம் இடையூறு விளைந்தும் திறம் திரம்பாமல், மண்ட

லம் முடித்து, அங்கயற் கண்ணியார்மீது **மீனுக்ஷியம்மைக் கலிவெண்பா** பாடி நிற்றலும், பராசக்தி அத்தலத்து அம்மையார் வடிவத்தில், முன்பு விருத்தாசலத்தே, மணி முத்தா நதித் தீரத்தே, ஆசிரியருக்குத் திருக்காட்சி தந்து பணி செய்த கடமையை வழியுரிமையாக்கொண்டு, ஈங்கு அவர்கொண்ட மாணுக்கருக்கும் அத்தொண்டே செய்தல் தகும் எனத் திருவுளம் இசைந்துச் சுவாமிகள் முன்னே தோன்றினுள்.

"**விச்சதின்றியே விளைவு செய்கும்**" பரம்பொருள், தம் முன்னர்த், தம் அநுபவத்திற்குக் கட்டுப்பட்டுத் தம்மை நோக்கிப் புன்முறுவல் பூத்துப் பொலிந்து நிற்பதை உணர்ந்த சிதம்பர சுவாமிகள், உச்சிமேற் கரம் சேர்த்து, நெஞ்சம் கம்பம் போல் ஊன்றி நிற்கவும், உணர்வு மாத்திரமாய் உவகை மாத்திரமாய், உள்புறம் ஓராத களிநிலையில் ஆனந்த மயமாகித் தம்பித்தார். புண்ணியப் பொருளைப் போற்றவும் செய்திலர். நண்ணிய பொருளை நாடவும் அறிந்திலர். கண்ணியப் பொருளைக் காண்டல் ஒன்றேயாச் சும்மாச் சமைந்தார். "சிந்தை தனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே" எனவும், "எனைப்பெரிதும் ஆட்கொண்டு என் பிறப்பறுத்த இணையிலியை அனைத்துலகும் தொழும் தில்லை அம்பலத்தே கண்டேனே" எனவும், "கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை வேதங்கள் தொழுதேத்தும் விளங்கு தில்லை கண்டேனே" எனவும், பெரியோர்கள் புகன்று போந்த பெருநிலையே நிலையாகப் புகுந்து நின்றார்

**நின்றவரை,** "ஓங்கார கம்பத்தின் ஓசை வடம் தொட்டேறி ரீங்கார வட்டத்து இனிது நின்று, பாங்காக, விந்தையொடு பல் விசித்திரங்கள் காட்டி இன்பமுந்தும் செகச்சால மோடி செய்து, தந்திரமா, மெய்க் கரணமாய வினோத வித்தை பல் கோடி, கைக்கரணம் ஓர் அனந்தம் காண்பிக்கும்" சிவசக்தி, உளம் கசிந்து, "புன்முறுவல்

பூத்த் புனிதமலர்ச் செவ்வாயும், நன்முறுவல் பூத்த நகை முகமும்—வின்முறுவல், மானக் குனித்த மணிப்புருவ மாநெறிப்பும், பானல் குசுமம் உற்ற பைஞ்செவியும்— ஞானமுறத், தேக்கும் கருணைத் திருவிழியும், தண்ணருள் கூர் நோக்கும் திலக நுதல்பிறையும் — காக்குமெழில், கைம்மலரும், நெஞ்சக் கருப்புவில்லும், பூம்பாண, ஐம் மலரும், பாசமுடன் அங்குசமும் — பைம்மணிதோய், செம்பட்டுடையும், திருமேனிக் குங்குமமும், வம்பிட்ட கத்தூரி வாசனையும் — பம்புமணிப், பொற் சிலம்பும் மின்னிப் பொலிகின்ற பூங்கழலும், கற்சதங்கை யார்க்கும் கலகலப்பும்—நற்சுயமாம், வண்ணம் படைத்த" வான் வடிவத்தால் சிதம்பரப் பெருமானுரை விவேக சகசத்தே நிறுத்தி ஆட்கொண்டு, மேல் திருவாய் மலர்ந்து சில சொல் அருள்வாளாயினுள். "அன்ப!, இப்பதியின் வடபால் முப்பது யோசனை தூரத்தில், திருப்போரூர் என்னும் ஸ்தலம் ஒன்றுண்டு. அஃது ஆறு முறை கிலமாகி, ஏழாம் முறையாகச் சத்திபதிந்து விளங்க, நின் வருகைக்காகக் காத்துளது. அத்தலத்தின் மூர்த்தியாய என் இளைய மைந்தன் திருமுருகன் ஏறுபரியாகும் திரு மயிலே நின் சொரூப சகசத்தில் தோன்றியதாம். நீ காலம் தாழ்த்தாமல் ஆண்டு சென்று, அம்மூர்த்தியால் ஆட்கொள்ளப்பட்டு, அத்தலத்தில் நின் சக்தியைப் பதி வித்தல் செய்வை", என்று ஆணையிடலும், அவ்வாணை யைத் தம் அருஞ்சிரத்தின் மேல் தாங்கி, விரைந்து சென்ற சுவாமிகள், விருத்தாசலம் சேர்ந்து, தேவனர் நிட்டைகூடி இருந்தமையின் அவர்பால் விடைபெற்றேக இயலாமல், குரவரைத் திருவலம் வந்து மேற்செல்வாராஞர். செல் வழியில், பொம்மைய பாளையத்தில், சித்த மூர்த்திகளான பாலைய சுவாமிகளைத் தரிசித்து, எட்டு நாள் அவருடன் தங்கி இருந்து, பல சுத்த சாதகச் சித்து நெறி நுணுக் கங்களை அநுபவ வாயிலாக உணர்ந்து, ஒன்பதாம் நாட் காலை பயணம் மேற்கொண்டார் இந்தப் பாலையப் புண் ணியரே, முன்னர்த் துறையூர் சிவப்பிரகாச சுவாமிகளால்

பாடல் பெற்ற பெரியோர். இவர் சிவப்பிரகாசர் முதலா நான்காம் பரம்பரை பெற்ற நம் சிதம்பர சுவாமிகள் வருகைக்காகவே காத்திருந்தார் போலும். சதுரக்கள்ளிப் பால் ஒன்றையே உணவாக் கொண்ட இச்சித்தர் நீண்ட காலம் திருவுருக் கரவாமல் கரு வுருவிலேயே சித்தாடி விளங்கி இருந்த பான்மையைத் தெளியுங்கால், இன்ன காலம் இன்னவர் தோன்றி இன்னதோர் பெருங்காரியம் சாதித்தற்குள்ளார் என முன்னோர்ந்தும், அன்னவருக்குத் தாம் புலப்படுத்த வேண்டியன சிலவும் உளவே என்று உணர்ந்தும் அக்காலம் வரை அந்நிலையில் நின்றிருந்தனர் என்று ஒருதலை கொள்ளவும் நேர்கின்றது. நிற்க, **மேற் சென்ற சிதம்பர சுவாமிகள்** வழியில் கிளியனூர் என்னும் ஊரில் தங்க நேர்ந்தது. அங்கே பசி மிகுதியால் துன்பம் ஏற்படவும், ஒரு விதவை மூதாட்டியார், தம் பூர்வ புண்ணியம் இருந்தவாறு, சுவாமிகள் பசித்துள்ளதை உணர்ந்து, அவருக்குக் கேழ்வரகுக் கூழ் இட்டுப் பசிதீர்த்து, அவர் பயணம் மேற்கொண்டபோது, அவரைப் பின் தொடர்தல் ஆயினர். அந்த அம்மையாரைச் சுவாமிகள் ஓராண்டு கழித்துத் திருப்போரூர் வந்து சேருமாறு சொல்லி நிறுத்தி, வழியேகித், **திருப்போரூரைச் சேர்ந்து,** அந்தப் பனங்காட்டில், வள்ளிப் பூண்டு நிறைந்த ஓர் ஓடையில் நீராடி நித்திய ஒழுக்கம் முடித்துப் பூசனைக்குக் கோயில் உண்டோ என்று ஆங்கிருந்தவரைக் கேட்க, **வேம்படி விநாயகர் கோயிலை அவர்கள் காட்ட,** அங்கு தங்கி அத்தீர்த்தத்தில் மூழ்கி, அக்கோயிலில் இரண்டு நாள் பொழுது இருந்து, மூன்றும் நாள் காலை தீர்த்தம் நோக்கிச் சென்றபோது, அவரை ஒறுத்து, அணிந்திருந்த தங்க அணிகளைக் கவர வந்த கள்வர் சிலர் கண்ணிழந்துத் துன்பம் உறவும், அவர்களுக்குப் பார்வையை மீள்வித்து, அவர்பால் சேர்ந்திருந்த அணிகலன் முதலிய பொருள்களைக் காணிக்கையாகப் பெற்றுக் கொண்டார். உடனே வள்ளையாரோடையில் நித்திய ஒழுக்கம் செய்துகொண்டு, பனைகளை பார்வையிட்டபடியே வந்தபோது, ஒரு பெண்

**பனையின் வேரினிடமாக முளைத்திருந்த சுயம்பு மூர்த்தியைக் கண்டு,** அதன் தோற்றத்தைப் பற்றிச் சிலரை வினவ, அவர் அச்சுயம்பு மூர்த்தியின் பிரபாவத்தைச் சிறப்பாக எடுத்துக் கூறினர். "சில காலத்திற்கு முன்னே சான்றான் ஒருவன் ஒரு பெண்பனையை ஒருநாள் கள்ளிறக்கப் பக்குவப்படுத்திச் சென்று, மறு காலை வந்து பார்த்தபோது, அப்பனையைச் சுற்றி யிருந்த கொடிகளை அவன் முன்னாள் வெட்டி எறிந்திருந்தும், அவை மீண்டும் ஒரே நாள் பொழுதில் வளர்ந்து அப்பனையைச் சூழ்ந்திருந்ததைக் கண்டு, அந்நாளும் முன்னாள் செய்தது போல் கொடிகளை ஒதுக்கிச் செதுக்கிச் சென்று, பின்னாள் வந்து பார்த்தபோது, மறுபடியும் கொடி படர்ந்திருந்தமையின், வேரோடு அவற்றை வெட்டிக்களைய முயன்ற காலத்தில் பனை மூலத்திருந்து குருதி காணவும் மூர்ச்சையாகி, ஆங்கு அருகிருந்தார் செய்த தெளிவால் தெளிந்தெழுந்தவன், நன்கு அவ்விடத்தை ஆராய்ந்து, பெண்பனை மூலத்தே முளைத்தெழும் சுயம்பினைக்கண்டு, தன் இனத்தாரைச் சேர்த்து, அம்மூலவருக்குக் கூரை வேய்ந்து, ஏணிக்கொரு பெரிய பணம் சேர்த்து, ஒரு ஆதி சைவரைக் கொண்டு பூஜை செய்விக்க முயன்ற போது, முதல் நாளே, வேய்ந்த கூரையும் அருகிலிருந்த குடிசைகளும் தீப்பற்றிக்கொள்ளுதலும், அஞ்சிப் பூஜை நிறுத்தப்பட்டது" என்று ஊரார் கூறியதைக் கேட்டறிந்த சுவாமிகள், இஃதே **இவ்வூர் மூலவராதல் வேண்டும் எனத் தீர்மானித்தார்.** அன்று முதல், அம் மூலவரை நாள்தோறும் தரிசனம் செய்து கொண்டு, வேம்படி விநாயகர் திருக்கோயிலில் வதிந்து வந்தார். அக்காலத்தில், இத்தலத்தை மீண்டும் புதுப்பிக்கும் மார்க்கம் யாதோ என்று கவலையுள் தோய்ந்திருந்தபோது, ஒரு சமயம் தம் எதிரில் குமாரதேவர் வருதல் கண்டு, அவரை வணங்கி, அங்கையற்கண்ணியம்மையாரின் திருக்கட்டளை பற்றிக் கூறி, மேல் நிகழ்த்த வேண்டியவை சார்பாகப் பேசும்போது, வந்தவர் சிதம்பர சுவாமிகளுக்குத் திரு நீறு நெற்றியிலிட்டு நோக்கவும்,

முன்னர் அக்கோயில் இருந்த விதமெல்லாம் சுவாமி களுக்குத் திருநோக்கமாகவும், அவ்வாறு நோக்கமாகிய பண்டைய ஆலயத்து மூர்த்தியை வந்தவர் வணங்க, தாமும் வணங்கி, மேலும் வந்தவரை வணங்குவான் வேண்டிப் பார்வையைத் திருப்பியபோது, வந்தவர் திருவுருவம் கரந் தார். கரந்திடவும் நம் சுவாமிகள், வந்தவர், அம்மையார் முன்பே சொல்லியது போல், முருகக் கடவுளேயாதல் வேண்டும் என்று துணிந்துப் பெரிதும் ஆனந்தம் அடைந் தார். எனவே, "ஆறு சமயக்கடவுள் வேறுவேறு இன்றி யான் ஒருவனே அங்கங்கிருந்து அன்பர்க்கு முத்தி தரும் வித்து" என்று கூறிய குமரநாதன் நம் சிதம்பர சுவாமி களின் முன்னர், அவருடைய குருமூர்த்தியான குமார தேவனார் வடிவில், தோன்றித், தன்னை மூலவனுக்கொண்ட திருப்பதித் திருக்கோயிலை முன்னிருந்தவிதமே, அடியாருக் குப் புலப்படுத்தி, அவர் காணத் தம்மையே தாம்வணங்கி நின்றார் என்பது தெளிவாகப் போதருகின்றது. என்னே ஆண்டவன் அடியாரை ஆளும் திறம்! நன்று! நன்று! தனக்கே தம்மை அர்ப்பணம் செய்து கொண்ட தவச் சிலர்களுக்கு முழுமுதற் பரம்பொருள், தொண்டு செய்யும் முறைமையின் எளிமையும், கனிவும், ஈடெடுப்பு இல்லாக் கருணைத் திறன் அன்றோ? இத்திறனையே வியந்தன்றோ எம் மாணிக்கவாசகத் தெய்வம், "ஆதியே! அருத்தனே! அங்கணா! அமலனே! அடிகளே! அப்பனே! ஐயனே! அத்தனே! அருளனே! அடியனேன் ஆதரித்தழைத்தால் அது எந்துவே என்று அருளாயே!!" என்று முன்னரே அருளிச் செய்துப் போந்தது? "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த் தும் அப்பெற்றியன்" ஆவன்; ஆதலின் அன்றோ, முன்னைக் கோயிலின் முழு வடிவ வரம்பு வகுப்பையும், பின்னரும் கூட்டுவிக்க, எம் சிதம்பர தேவனாருக்குக் காட்சிப் புலனாகி, ஓசைப் பொறி வாய்த்து, இயங்கி, அந்தக் "கேட்டாரும் அறியாதான், கேடொன்றில்லான், கிளையிலான், கேளாதே எல்லாம் கேட்டான்" திருவருள் கனிந்துக் "காட்டாதன

எல்லாம் காட்டிப் பின்னும் கேளாதன எல்லாம் கேட்பித்து"த் தேவனரைக் குருவாம் குருமூர்த்தத்தில் வந்து ஆட்கொண்டான்.

ஈண்டு வழிமுறை வழிமுறையாய்ச் சித்துநெறி செல்லும் கடப்பாடு பூண்ட தெய்வச் சிதம்பரனர், வேம்படி விநாயகரையே முதன் முதலாகத் திருப்போரூரில் கால்வைத்த அவ்வேளை முதல், புகலிடமாகக் கொண்டு, அவர் ஆலயத்திலேயே தங்கி, மேல் ஆவன எல்லாம் கைவரப் பெற்றமையின், அந்த வேம்படி விநாயக விசிட்டப் பரப்பிரம்மப் பொருளே ஆறுமுகப் பொருளுக்கு அபேதமாதலின், அன்னவருக்குக் குமார தேவக் குரவனர் திருவடிவத்தில் தோன்றி, உதவி, அத்தலத்தின் மேற்புகழுக்கும் பயனுக்கும் மீண்டும் அடிகோலியது எனத் தெரிதல் நம் போல்வார் கடனும். தலக்கோயில் அமைப்பு அடங்கலும் புதையுண்டு போயிருந்தும், வேம்படியார் திருக்கோயில் ஒன்றே முன்னிருந்தது போல் நின்றிருந்தமையின், அங்கு எழுந்தருளியுள்ள மூர்த்திப் பொருளே, திருவருள் சுரந்துத் தேவனருக்கு இக்காரியம் நேர்வித்தது என்று கோடலே அமையும். அஃது உண்மையாதல், மேலும், பின்னர், சிதம்பரனர், தம் திருமடத்தையும், அவ் வாலயத்தின் அருகேயே அமைத்துக் கொண்டமையால் புலனும்.

இவ்வாறு, வேம்படி விநாயகரால், பண்டைக் கோயில் அமைப்பை நோக்கித் தெளிந்த சுவாமிகள், அவ் வேம்படியே வீற்றிருந்துச் சுயம்பு மூர்த்தியை நாள் தோறும் வழிபட்டு வரும்போது, **"நெஞ்சுவிடு தூது"** என்றொரு நூலியற்றித் தம் குரவருக்குச் செலுத்தினர். ஐயர், இவ்விடத்திருந்து செய்த சித்துக்கள் எண்ணில் அடங்கா. அருகிருக்கும் கண்ணுவப்பேட்டு முதியோன் ஒருவனுக்கு மறைந்த கண் பார்வையை மீள்வித்தார். அம்முதிய குலாலன் அழைப்பிற்கிணங்கிக் கண்ணுவப் பேட்டையினுள்ளேயே ஒரு புனிதப் புளிய மரத்தின் கீழ், தீ வளர்த்துக் கொண்டிருந்து பல செயற்கரும் செயல்

களைப் புரிந்தார். காலவாக்கம் முடவனுக்குக் கால் வரச் செய்தார். பலருக்கும் பசியும் பிணியும் பகையும் போக்கினர். இவ்வாற்ருன் காணிக்கையாக் கிடைத்த பொருளும் பொன்னும் சேர்த்தார். அக்கால் திருப்போரூர் பூர்வ குடிகளான சான்ருர்கள் அவரை வந்தடுத்துத் தங்கள் ஊரை கோயிலுக்குத் தந்த உடைமையாச் செப்பேடு எழுதிச் சுவாமிகளிடம் அர்ப்பணம் செய்து, தலக்கோயிலை மீண்டு நிறுத்தும் தலையாய பணியில் தலை நின்ருர். அக்கால் கிளியனூர் மூதாட்டியார் அங்கு வந்து சேர்ந்தார். நெசவினர் உதவாதென எறிந்த நூலிழை கொண்டு நெய்த துணி விற்றுச் சேர்த்த ஒரு பொன்னை அவ்வம்மையார் தேவனுருக்குக் குரு காணிக்கையாக வைத்தலும், அப்பொன் கோயில் கருப்பக்கிரகச் சிகர வேலைக்கு ஆமென்று பெற்றுக் கொண்டார் செல்வச் சிதம்பரர்.

**அதன்** பின்னர், சென்னைப் பாளையத்தா செட்டியார் வைத்து வணங்கிய இரண்டு பை வராகனையும் முதலில் பெற்றுக்கொள்ள இசையாமல், பின்னர் ஒருவாறு மனம் இசைந்து பெற்றுத் திருப்பணிக்குச் செலவு செய்தனர். மேலும் சிலர் தந்த தொகைகளையும் பொருள்களையும் கொண்டு நம் சுவாமிகள், கர்ப்பக்கிருகம், அந்தராளம், மகாமண்டபம், மயில் மண்டபம், துவஜத்தம்பம், பலி பீடம் ஆகியவற்றை நிறைவேற்றி, மந்திர யந்திர ஸ்தாபனம் வைத்துக் கும்பாபிஷேகம் முடித்து நித்திய பூசை முதலியவை முட்டின்றி முடிய ஆவன யாவும் ஆற்றினர்.

**இன்னும்**, தம் சத்த சாதக நிறைவு வேண்டி, **ஒடுக்க உறையுள்** உள்ளிட்ட ஒரு திருமடத்தைக் கண்ணுவப் பேட்டையில் கட்டிமுடித்து, அதன் பக்கலில் "சுந்தர விநாயகர்" பிரதிட்டை செய்து, அதன் கீழ்பால் "வேலாயுத தீர்த்தம்" அகழ்ந்து வைத்து, அதன் எதிரே "வேலாயுதப் பிரதிட்டை" முடித்து, அம்மடத்தில் உறைவாரானர். அக்கால். தம் குருவருள் இருந்தவாறு

தம்மைக் கருவியாக் கொண்டு அத்தலத்து முருக மூர்த்தம் முடித்துக் கொண்ட திருச்சந்நிதிக்கு, அன்பர் முறையிட்டுக் கொள்ளுதற்குப் பேருதவியாகத் "திருப்போரூர்ச் சந்நிதி முறை" என்னும் ஓர் திவ்விய தெய்வத் திருமுறையை விரைந்து இயற்றி வைத்தார். மேலும் கிளியனூர்த் தாயாருக்கு **ஞானம்மை** என ஞான நாமம் இட்டு அவருக்கு நிட்டோபாயம் சொல்லி வைத்தார். இவ்வம்மையார் பெருக்கி வைத்த "வற்றா நீர்க்குளமும்", செய்துவைத்த சிவலிங்கப் பிரதிட்டையும் பெரிதும் பாராட்டுதற்கு ஏற்றனவாம். இவ்வம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்கி சுவாமிகள் **திருவாசகத்துள்** ஒரு வாசகமாகும் **ஆனந்தத் தழுந்தல்** என்னும் எட்டாம் பகுதியில் எட்டாப் பொருள் கொண்டு முதற் செய்யுளா நிற்கும் திருப்பாசுரத்தினுக்கு நுதற் கண்ணனைப் பொருளெனக் காட்டும் ஓர் புண்ணியத் திருவிளக்கப் பேருரை இயற்ற முனைந்தபோது, **போரூர் விநாயக ஆறுமுகம்** குருகுமார தேவ வடிவத்தில் தோன்றி "முதல் நூலார் மரபுணர்ந்து உரை செய்யற் பாலையே யன்றி நின்னிலைப் பொருளா யோர்ந்து செய்யற் பாலையோ? அம்முதலோர் தம் முதல் நூற்குப் பொருள் அச்சிவமே எனக்குறித்து விளக்காமல் சென்றுள்ளபோது, நீவிர், அவர் திருவுளம் மீறி இக் காரியம் இன்று செய்தல் இயலுமோ?" என்னலும், சுவாமிகள் நடுக்குற்று, "பெண்பால் விண்ணப்பம் கருதி இயல்வதோர் உரை செய்வான், அறியாதான் அறிந்தான் போல் தொடங்கியது, குற்றம் பொறுக்க! பொறுக்க!" என்று ஓலமிடலும், தாமே தம் முதலாய குருச்சுயம்பு அன்னவரைத் தேற்றி "முற்பட்டாய் ஆதலின், முதற் செய்யுள் ஒன்றினுக்கே, சற்றே சொற் பொருள் காட்டி அமைதலே தகும்" என்று கட்டளை செய்து மறைந்திடவும், தெய்வச் சிதம்பரனார் அற்றே செய்தனர். அம்மையார் அஃதறிந்து ஆனந்தம் அடைந்து, சில காலம் நிட்டை நெறியே நின்றுத் தம் அநுபவத்தை "நிஷ்டாநுபவம்" என்னும் நூலால் வெளிப்படுத்தி, ஓர் ஏகாலிப் பெண்

னுக்கு அநுக்கிரகம் செய்து, கிளியனூர்ப்பாதிரி என்னும் தலத்தில் தம் குருவின் ஆணையின்படி ஒடுங்கினர். சிந் நாள் கழித்து ஏகாலி அம்மையும் அவ்வூர் சென்று ஒடுங் கினர். இவ்விருவர் சமாதிகளும் இன்றும் அங்கு வழி பாடு நாடும் இடங்களாக விளங்குகின்றன.

**மேல்**, சிதம்பர சுவாமிகள் பற்பல நன்மைகளை நாடி னோர்க்கெல்லாம் செய்து கொண்டுத் தம் சுத்த சாதகத் தில் பழுத்தவராய், சித்தெலாம் கைவரப்பெற்றவராய், அங்கலிங்க ஐக்கிய நெறியில் முன்னேக்கிச் செல்பவராய்த் தம் தேகம் சுத்த தேகமாகித், தம் சாரம் விஞ்ஞானமாகித், தம் இருப்பு உண்மை அத்துவிதமாகித், தம் அனுபூதி பிரமமாய், மேல் ஞானமாய், தசாவத்தையும், தச காரிய மும் கடந்த சகச நிட்டையாய், உபதேச உரிமைக் கடமை நிலை எய்தினர்.

**அக்கால்**, பூவிருந்தவல்லி சார்ந்த கோவூர் வேளாண் திரிபுராந்தக முதலியாருடைய புத்திரர் ஒருவர், சிவசங் கரர் என்னும் பெயருடையார், பண்டைப் பெருந்தவத் தால், இளமையின் கண்ணேயே முருகப் பெருமானல் ஆட்கொள்ளப்பட்ட காரணத்தால், "சிரிப்பார், களிப்பார், தேனிப்பார், திரண்டு திரண்டு உன் திருவார்த்தை விரிப்பார், கேட்பார், மெச்சுவார், வெவ்வேறு இருந்து உன் திருநாமம் தரிப்பார்" என்ற பழஞ்சொல் பொருள் நிலைக்கு வழியாய ஒரு நிலையில் இயங்கி யிருந்ததை உணராத தந்தையாரால், அந்நிலைக்குத் தீர்வு தேடும் முயற்சியின் முடிபாக நம் சுவாமிகளார் திருச்சந்நிதிக்கு உய்க்கப்படுதலும், பிள்ளையின் பக்குவப் போக்கை உணர்ந்த சுவாமிகள், அப்பிள்ளையை மூலவர் சந்நிதியில் கிடத்தி, ஆராதனை மேல் செய்த காலையில், ஆண்டிருந்த சிறுவர் ஒருவர் மீது, திருமுருகு கூர்ந்து "யாம் ஆட் கொண்ட இப்பிள்ளை எமக்கே ஆகுக", என்று முழங்க, அப்பிள்ளையாண்டார் நம் சுவாமிகளார்பால் தங்கிவிட நேர்ந்தது. அவ்வாறு தங்கிய அவரை நம் சுவாமிகள்

உபதேசவாயிலாகப் பக்குவப்படுத்தி, அவர் கரத்தில் ஒரு வேலாயுதத்தையும் செப்புத்தட்டினும் தந்துத், திருநீற்றுக் குவளையும் ஏந்தச் செய்து, ஆலயத்திலிருந்துத் திருப்பணி செய்து, வேண்டுவோர்க்கு "**ஆறுமுகம் துணை செய்யும்**" என்னும் வாழ்த்துடன் நீறும் அளிக்கப் பணித்து ஆங்கு நிறுத்தினர். இவரே சுவாமிகளுக்குப் பின்னர் **சிவசங்கர தேவர்** என்னும் திருப்பெயரோடு ஆதீனத்து இரண்டாமவராக விளங்கியவர்.

**நிற்க,** சிவசங்கரர் தம்பால் தெய்வத் திருவருளால் வந்தெய்தத் தம் உபதேச உரிமைக் கடமையை நிறைவேற்றிக் கொண்ட தெய்வச் சிதம்பர சுவாமிகள் மேல், பிரமசித்திபெற்று, இன்னும் சிவதரிசனம் அநுபவித்து, ஆகமநெறியும் வேதநெறியும் கடந்த பிரமானுபவ நிலையும் எய்திச் சிவசமமாம் உச்சிநிலையும் உற்றூர். இந்நிலையெலாம் எய்துதற்கென அவர் அமைத்துக்கொண்ட பயிற்சிக்களமே, மடத்திருக்கும் **ஒடுக்கம்** என்பது தெளிதல் வேண்டும். திருமடத்தே நடுவிடத்தே அமைந்த ஒடுக்க வாயில் கீழ்நோக்கிப் பூமிப் பரப்புக்கு அடிநெறியே சுரை போல் சென்று, ஆலயத்தில், கர்ப்பக் கிரகத்தின் சுற்றுப் பிரகாரத்தின் வடகீழ் மூலையில், ஆறுமுக சுவாமிகள் சிலா பீடத்தின் கீழ்த் திறந்து முடியும். மேல் மற்றொரு சுரைவாயில் அப்பிரகாரத்துத் தென்மேல் மூலையில், திருக் கதவம் மூடியுள்ள அறை போன்ற பகுதியின் இடச்சுவரிடத்தே தொடங்கி மேல் நோக்கிப், பூமியின் கீழ் வழியே மலை மீது ஓடி, மலை யுச்சி மேல் உள்ள ஆலயத்தின் உட்பிரகாரத்தின் வடமேல் மூலையில் திறந்து முடியும். இக் கீழ்மேல் சோபானச் சுரை மார்க்கத்தினைச் சுவாமிகள் தமக்கெனக் கொண்டுத் தனியாக வைத்தமையின், அதன் அமைப்பு முறையும் பிறவும், கலைப்பயிற்சி நிரம்பிய இந்நாளினும், வலிந்து சென்று ஆராய்தற்கு இயலவில்லை.

**தெய்வச் சிதம்பரனார்** பெண்பனை மூலத்தே கண்டு, உணர்த்த உணர்ந்த, இருதேவியரும் கூடிய மூலவரே,

ஆதிச் சுயம்பு வளர்ச்சி குன்றுமல், இருந்த இடத்தே இருக்குமாறு அமைக்கப்பட்டதே இன்னும் அடியார்க் கெளியஞன போரூர் ஆண்டவன் ஆலயம். அவ்வுயர்ந்த சுயம்பு மூலவர் மூவர் முன்பு உள்ள மூவரும் நம் சுவாமி களால் நித்திய விசேட வழிபாட்டுக்கென நவமாக நிறுத் தப்பட்டவர். சுயம்பருக்கு நீராட்டல் என்றும் இல்லை. புனுகு சாத்தி, அணி பூட்டி, உடை ஏற்றி வருதலே, சுவாமிகள் காலம் தொட்டு வரும் வழக்கம். கீழ்ப் பீடத் தில் உள்ள நவமூலரது மேல் தூக்கிய கரங்களில், பிருண்டு இல்லாவகையில் ஜபமாலையும் கமண்டலமும காணப்படு கின்றன. இக் கோலம் சிவகுமாரன் படைத்தற் ருெழில் செய்யும் கோலம் என்பர் உணர்ந்தோர்

**இவ்வாறு**, சிறந்த முறையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் விளங்கச் செய்துத் தமக்குப் பின்னர் ஆவன தொடர்ந்து செய்யச் சிவசங்கரத் தேவரையும் பக்குவப் படுத்தி வைத்த சிதம்பரசுவாமிகள், "ஊண் அவனுக, உயிர் அவனுக, உளது இலது உரு அருவாக, வான் அவனுக, வளி அவனுக, வன்னி நீர் மண் முதலாக, நான் அவனுக, நன்மை தீது ஆக, நடு அடி முடி திசை எல்லாம் தான் அவனுகத், தனே உணர்வதும் போய்த், தான் இறந் திருப்பதே சமாதி" என்னும் **சமாதி சகசம்** கடந்து, "காணுதல் கேட்கப் படுகுதல் என்னும் களங்கம் அற்று, அகளங்கமாகி, நாணுதல் நடத்தல் செய்திடல் அவத் திஞல் அவன் நீ இவன் என்னும் கோணுதல் வழங்கும் குறிகள் ஒன்றில்லா கோசரத்தொடர்பேனும் அதனில், பேணுதல் இல்லாது அகண்ட பூரணமாய்ப், பேச்சிறந்து இருப்பதே பிரமம்" என்னும் **பிரம சகசம்** கடந்து, "பின்னிய பஞ்சகோச பூதமும் போய்ப்பிரமமாய். நினைவு இன்னது என்னும், பன்னிய அதுவாய், அதுவெனல் நீங்கிப், பசுபதி பாசம் அற்று இறந்து, மன்னிய சுடராய்த் தேங்கி, எங்கனுமாய், மனமது பற்றுவது ஒழிந்தும், அன்னியம் எனல் போய், நிரதிசை வடிவாய் அசஞ்சலம்

அறிவது ஆனந்தம்" என்னும் **ஆனந்த சகசம்** கடந்து, "தற்பதம் உற்ற சன்னிதி விளக்காய்த், தண்ணருள் பிரபையாய் நிரம்பி, புற்புத நித்தம் வந்துறும் போதும், போலி எனக் கண்டிலாத அதுவாய்ச், கற்பதக் கர்த்தத் துவம் பயில் பொதுவாய்ச் சிவராசிகள் தோறும் உதித்தே அற்புத சித்த நிரஞ்சனக் கடலாய், அளக்கரும் சுடர் அறிவு-அமலம்" என்னும், **அறிவமல சகசம்** கடந்து, "பங்கு யாதென்று பகுத்தவற்கு அறிவாய்ப், பாசிவ போகமும் கலந்து, தங்கு யாது என்று இங்கு அறிவதற் கில்லாத் தங்களைச் சுபாவமாய் விரித்து, முங்கியாது, என்றும் பிசகற, பிரக்கியை முழுச்சுடர் மேனியாய், நிறைந்து, சங்கியாது, என்றும் எங்கணும் சமமாய்ச் சகசமாய் இருப்பதே சாட்சி" என்னும் **சாட்சி சகசம்** கடந்து, "வேதனைத் தானாய், அரிதனைத் தானாய், வெற்றி கொள் உருதமானைத் தானாய், வாதனைத் தானாய், சதாசிவன் தானாய், வருந்து உருவாதியைத் தானாய், நீதனைத் தானாய், நினைப்பினைத் தானாய், நினைப்பற இருப் பவன் தானாய், நாதனைத் தானாய், அறிபவை நசித்து நான் எனல் நசிப்பதே நாட்டம்" என்னும் **நாட்ட சகசங்** கடந்து, "சோதி மத்தியாந்தம் முடிவில் வீற்றிருக்கும் சோடச கலை பிரகாசம், நீதி மத்தியாந்த வடிவமாய் விளங்கும் நிகர் என்றனக்கு யாது என்றும், தேதி மத்தி யாந்தம் மாதம் நீள் வருடம் தென் வடகிழக்கு மேற் கென்னும், ஆதி மத்தியாந்த சாகரமாகும் அஃதவை அவமிலாத அகண்டம்" என்னும் **அகண்ட சகசம்** கடந்து, "சங்கு பட்டு உலவா, வேகினும் கருகா, சகச மாம் உடற்குறி வெண்மை, தங்கு பட்டு உலவா, விரிகினும் இங்ஙன் தனக்கொரு தீங்கில்லை; நாளும் மங்கு பட்டு உலவில் அடவது கோணு, மாசிலாப் படிகமாம் சோதி பங்கு பட்டு உலவா, தெரிவரும் பொருளாம் பகல் இரவு அற்ற இடம் பரமே" என்னும் **பரம சகசம்** கடந்து, "மகத்தினுக்கு அரிய மகத்வமாய், அடங்கா மணிக்கடல் அனந்த நீள்கோடி அகத்தினுக்கு அரிதாய்,

அவமுமாய், நீங்கா, அந்தரக் ககனவட்டமுமாய், முகத்தினுக்கு அரிய முகமுமாய், அமலமூர்த்தியாய்க், கீர்த்தியின் மிக்கச் செகத்தினுக்கு அரிய சுடரொளி அறிவாய்ச், சிந்தை அற்றிருப்பது சிவமே" என்னும் **சிவ சகசம்** கடந்து, "வகுக்கும் ஐந்தொழிற்குள் உயிர்த்துணையாகி, வருமசதாசிவன் முதல் இவரால் பகுக்கும் அங்கு உரிய சத்திகளும் பஞ்சகங்களுடை, அவரவர்க்கானது உகுக்கும் ஐந்தொழிற்குள், உயிர்த்துணை யளவில், ஊகசித்து எனும் பகலவனுய்த், தொகுக்கும் எத்தொழிற்கும் சருவசாட்சியதாய்த் தொய்தம் அற்று அறிவதே சொரூபம்" என்னும் **சொரூப சகசம்** கடந்து, "மண்ணிலே மறைய, மறைந்தபின் வருக, மலையென வளர்ந்து எதிர் நிறக, தண்ணீரில் கரையாது, இரண்டுரு எடுக்கத், தரணியோர் நினைத்தது சொல்லக், கண்ணிலே நுழைய, கரியமான் முகில் ஏழ் காலிலே தளையது பூட்ட, விண்ணிலே இருந்து நடந்து வந்துறினும் வித்தை என்று அறிவதே விவேகம்" என்றும் "கடல் வரவழைக்க, மேருவை வளைக்க, கடலை ஆசமனமதாக் கொண்டும், உடல் இறந்து அயலோர் உடலினில் பாய, ஊரிலா வெளியில் ஊர் கட்ட, வடல் கனல் விளைக்க, அட்ட நாகங்கள், அட்ட வெற்பினை வரவழைக்க, விடல், பல விகற்ப சித்தி காட்டுகினும் வித்தை என்று அறிவதே விவேகம்" என்றும் "தந்தை அன்னை முன் தவிர்ந்தவர் அழைக்கத், தடம் தவழ் மணல் புரி முறுக்கச், சந்தையம் இலனுய்ச் சலத்தின்மேல் நடக்கச், சலம் தனைத் திரட்டியே எடுக்கப், பந்தையம் சொல்லி வடவை மேல் இருக்கப், பருதியோடு உவாமதி அழைக்க, விந்தையின் பல விசித்திரம் செயினும் வித்தை என்று அறிவதே விவேகம்" என்றும் "ஆண் உருவதனைப் பெண் உருவாக்கி, அடுத்த பெண்ணுருவை ஆணுக்க, காண் உரு அனைத்தும் பேதனம் செய்யக், காமனைக் கண் எதிர் அழைக்க, சேண் உரு எடுத்துச் சேணிடை ஒழிக்கச், செம்பு இரும்போடு பொன் அகத்தின், வீணுரு அனைத்தும் கற்பிதம் சித்து வித்தை

என்று அறிவதே விவேகம்'' என்றும் "நாட்டிலே சரிக்கின் உருவிலாது இருக்க, நவில் அரும் கிரிகள் பந்தாட, எட்டிலே எழுதாதவன் மிகப்படிக்க, எண்ணிலா வடிவெலாம் எடுக்க, காட்டிலே இருந்தபடிக்கு வீற்றிருக் கக் காமதேனு கற்பகம் அழைக்க, வீட்டிலே அடைக்க வெளியிலே வரினும் வித்தை என்று அறிவதே விவேகம்'' என்றும் " உம்பர் பூதங்கள் பணியென நிற்க, ஊமையாய் இருந்தபேர் பேசத், தம்பமாய் அசையா மலை என நிற்கத், தனிமகமேரு அணுவாகக் கம்பம் மேல் ஊசி முனையிலே நிற்கக் கண்ட சித்திகள் பல சொல்ல, விம்ப சீவாதி விகற்பமாம் சித்து வித்தை என்று அறிவதே விவேகம்'' என்றும் **விவேக சகசத்தில்** நிலைத்து இனி உருக்கரத்தலே தகும் எனத் துணிந்து ஓர் **வைகாசி மாதம் விசாகப் பௌர்ணமியில்** அவ்விதம் எய்த நாளும் வேளையும் குறித்துக்கொண்டு, முன்னாளே சிவசங்கரத் தேவனுருக்கு, ஆலய நிர்வாகம் பற்றியும் பிற நெறிபற்றியும் விளக்கமாகச் சொல்லிவைத்து, மறுநாள் விசாகத்தின்போது, அவரைக் கோயிலுக்குச் செலுத்தி விட்டுத்தாம் குறித்துள்ள வேளைக்கு முன்பே, இறுதிக் கடமையாக ஒருவருக்கு உபதேசம் செய்யத் தாழ்த்திருந்தார். அப்போது அண்ணாமலையார் ஒருவர், **சோணாசலதேவர்** என்பூர், தம் முப்பதாம் ஆண்டு தொடங்கித் தொண்ணூற்றாறும் ஆண்டு வரை அறுபத்தாறு ஆண்டு காலம், அண்ணாமலை யானே குருமூர்த்தமாய் எழுந்தருளித் தமக்கு உபதேசித் தல் வேண்டும் என்னும் விண்ணப்பத்துடன், அவன் மலையை நாள்தோறும், தவறாமல் சுற்றிவந்தவர், இறுதி நாளில் மூச்சுறைந்து நின்ற காலை அண்ணாமலையான் ஒரு வேதியர் வடிவில் வந்து, தேற்றி எழுப்பி இட்ட கட்டளை யின்படி, அவனால் உபதேசம் பெறும் பேற்றினை விடச் சிறந்த பேறாகத் தெய்வச் சிதம்பரனார் பால் உபதேசம் பெறும் நியதி கொண்டு, அங்கு வந்து நம் சுவாமிகள் திருவடிகளின் பாலே திரு முடி சேர்த்து நின்றார். அவருக்கு நம் சுவாமிகள் திருவுபதேசம் செய்துச்

சிவசங்கரதேவருக்குத் தேறுதல் வார்த்தை கூறுமாறு கட்டளை செய்துத், தமது பூசைப் பொருள்களுடன், தம் பின் சுரை வாயிலை மூடிப் பூசுமாறுத் திருவுள்ளம் தெரிவித்து, ஒடுக்கத்தின் ஒடுக்கத்துள் புகுந்தருளிச் செய்தார்கள். அதே காலத்தில் **கருப்பக் கிருகத்தில் சுயம்பு முருக மூலவர் திரு மேனியுள், கூப்பிய திருக் கரங்களுடன் தம் மாணவர் காணவும், அவர் செய்யும் கர்ப்பூர ஆராதனை அது முதல் எவர் செய்யினும் தமக்கே செய்வதாம் என்னும் திருக்குறிப்பு தோன்றவும் கரந்தருளிச் செய்தார்கள்.** சுவாமிகள் மூலவருள்ளே அங்கலிங்க ஐக்கிய மாயதைக் கண்ணுற்ற சிவசங்கர தேவர், யாதொன்றும்தெளிதல் ஒண்ணமல், திருமடம் நோக்கி ஓடோடியும் வருதல் செய்யவும், எதிரே, சோண சலதேவர் போக்கிய ஏவலாளர் சந்தித்துச் சுவாமிகள் ஒடுக்கம் எய்தியதைக் கூறவும், அடங்கரிய ஆராமையால் சித்தம் தளர்ந்துச் செத்தார் போல் நடந்துத் திரு மடம் புகுந்து, ஒடுக்கத்தின் திரு முன்பு நின்று "ஐயனே! அருளால் அடியனை ஆண்டு இங்கு அருள்குரு என்ன வீற்றிருந்த துய்யனே! துணையே! தோன்றலே! நிறைந்த சுகக்கடலமுதே! எனை இவ்வையம் மீது இருத்தி, வடிவினை மறைத்த வன்மையை அறிகிலேன்! தமியேன் உய்யுமாறு அருள்வாய்! சிதம்பர தேவே! ஓ!" என உள்ளம் நைந்து அழுதார். அழுதாரைச் சோணசல தேவர் தேற்றிச் சுவாமிகள் சொல்லிய அனைத்தையும் அவரிடம் சொல்லிப் பிரிந்தார்.

**சிவப்பிரகாச** சுவாமிகளும், சாந்தலிங்க சுவாமிகளும் குமாரதேவ சுவாமிகளும், சுத்தசாகத்திறனுல், சிவலிங்கத் திடத்தே திருவுருவம் கரந்திருத்தலும், சிதம்பர சுவாமிகள், முருகச் சுயம்பு மூலத்தே அங்கலிங்க ஐக்கியம் கொண்டமையின் திருவுள்ளம் யாதோ? அறியகில்லேம்!

---

## திருப்போரூர்—சிதம்பர சுவாமிகள் அநுக்கிரகம் வேண்டி விடுத்த வினு வெண்பாச் சோடசம்

1

**விண்ணப்பம்** ஒன்றுண்டு; வித்தகரே! கேளீரோ?
மண்ணப்பம் தின்று நான், மாண்டிடாமல்—விண்ணப்பம்,
இப்பிறவி வீழாமுன், இங்கெனக்கே தாரீரோ?
அப்பா! சிதம்பரதே **வா**?!

2

**வாரா** வளச்சகசம் வாராதேல் நாயினேற்குச்,
சீரா வழியடியேன் சிந்தைமிகத் — தேராமல்,
புன்புழுக்கள் பூழ்த்திந்தப் புண்ணியந் தேருடலம்,
என்பெரிய தாமன்றே?! **எந்தாய்**!

3

**எந்தாயே**! என்னப்பா! எட்டாக் கழலிணைகள்
தந்தாயேல், விட்டிடாமல், தாங்கிமிகச்— சொந்தமுடன்,
தான் பற்றும் வன்மையதும் தாராயேல் என்ன பயன்?!
ஊன்பற்றும் ஒய்ந்திடுமோ?! **ஓது**!

4

**ஓதியுணர்** பக்குவத்தன் உம்நெறியை நானன்றே!
நீதியதா நீர்வந்து நிட்டூரச் — சேதியின்றி
நேதிவழி காட்டிமிக நேயமதாச் சொல்லிவைத்தால்
பாதிவழி ஏகேனே?! **பங்கு**!

5

**பங்காப்** பரம்பொருளைப் பங்கிட்டுப் பங்குபங்காத்
தங்காமல் மேலேறத் தக்கவிதம் — இங்கெனக்குப்
பிச்சுலகோர் வீசியெறி பிச்சைபோல் வீசாயேல்
நச்சுண்நா யாகேனே நான்?!

6

**நானூர்?** நயந்தென்னை, நாயகியாக் கொள்வானோர்,
தானூர்? தயவுடனே தந்துரைப்பீர்! — கோனூர்,
வழியிழந்த மேடமதை, வந்துபற்றி, ஏகும்,
வழிநீரும் செய்யீரோ?! **வந்து!**

7

**வந்துவிதம்** சிக்கறவே, வந்து நீர் தாமுரைத்தால்,
அந்தவிதம், அப்படியே, அச்சமின்றி, — முந்திமீள,
யான்முயல கில்லேனோ?! யான்கழல கில்லேனோ?!
தான்சுழல கில்லேனோ?! **சாற்று!**

8

**சாற்றினீர்,** வாசகத்தேன் சார்ந்ததொரு, செய்யுளுக்கே,
போற்றுமுறை! எனதனைப் புண்ணியனும்–ஆற்றவேண்டா,
என்றறுத்தான்? கள்ளகுல ஏந்தலர்கள் கள்ளநெறி
நன்றறிதல் நாட்டார்க்கே **நஞ்சோ?!**

9

**நஞ்சேனும்,** நான் விரும்பி, நாடிவிட்டேன், தின்றுவிடத்
தஞ்சேயாம், நீரென் தரமுணர்ந்துக் — கொஞ்சமேனும்,
உம்மருள்வெல் லத்துள், ஒளித்துவைத்துச், சுத்தநெறி,
விம்மலறத், தாரீரோ!? **வென்று!**

10

**வென்றுபுலன்,** மேற்பொறியும், வேழமுதல் தத்துவமும்,
சென்றுசென்றுச் சோபானச் சேயவழி — நன்று நன்று,
ஒன்றுவொன்றுக், கூடிமேலே, ஓமயமும், தாண்டிமேலே,
இன்றுயின்றுக் கூட்டீரோ?! **இங்கு!**

11

**இங்குளதும்,** அங்குளதும், எங்குளதும், ஒன்றேயாம்;
தங்குதிறம், ஓர்ந்தக்கால், தாமறிவீர்; — இங்கிதமா;
என்றுரைக்கும், வாசகம், என்றுணர்வேன்?! நாயடியேன்!
சென்றணர வைவீரோ?! **சேர்த்து!**

12

**சேர்த்தென்னை** ஆட்கொண்டுச், செய்யசுத்த சாதகத்தில்,
ஈர்த்தென்னை ஈடுபாடு இங்கிழைத்துப்— பேர்த்தும் மேல்,
ஆர்த்த தலம் அத்துணையும் அன்புடனே ஆளவைத்துப்,
பார்த்திருத்தல் ஆகாதோ ?! **பாய்ந்து** !

13

**பாய்ந்தபுலி** பாயாமுன், பைம்மான் தான் ஆவியற்றே,
சாய்ந்துவிழு தல்மானச் சாயேனோ ?! — வாய்ந்துமதா
வன்னேக்கம் என்னுதல்மேல் வந்துதாக்கின் கண்ணுதலீர்!
பொன்னேக்கம் வையீரோ ?! **புக்கு** !

14

**புக்குநக்குப்** புன்மாதர் பொன்வதனப் பொய்யுலகுள்;
மிக்குவிக்கிப் பாலதர மேவியுண்டு — நெக்குநெக்குத்;
தேய்ந்த யிடை தாம் தழுவும், தெம்மாங்குத்
தேன்சுவையான்
ஓய்ந்து விடக் கூட்டீரோ ?! **ஓர்ப்பு** !

15

**ஓர்ந்த** விதமெல்லாம், ஓயாமல், நீருமன்று;
சார்ந்தேயான், தேடிவிடச், சையோகம் — கூர்த்துமதுத்
தாடலையா, வாத்திரத்தால், தத்தித், தவிக்கின்றேன்;
கூடலையோ ?! என்னுள் **குவிந்து** !

16

**குவிந்த** குமுதமலர் கூம்பு விரிக் கும், நாள்
கவிழ்ந்த மதிபோல், கலையே — நிவந்த,
பரைவடிவால், நீர்தாம்! பரிந்தென்னைச் சுத்தம்,
விரைவுடனே, செய்யீரோ ?! **விண்டு** !

---

## திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்

### பரம்பரை இரண்டாமவர்

# சிவசங்கர தேவர் வரலாறு

(அஷ்டாவதானம் சபாபதி முதலியார் எழுத்தைத் தழுவியது)

---

சிதம்பர சுவாமிகளுக்குப் பின்னர், திருப்போரூர் மடலாயத்துக்கும், தேவஸ்தானத்துக்கும் பட்டம் வகித்தவர் சுவாமிகளுடைய முதல் மாணாக்கர் **சிவசங்கர தேவர்** இவர் முன்னோர் திருவுள்ளக்கடை யாவும் அறிந்தவராதலின், நன்கு தருமபரிபாலனம் செய்து வந்தார். ஒரு சமயம் கோவளம் நவாப் மருகன் திருப்போரூர் எல்லையில் ஆடொன்றைத் துணிக்க முயன்றதை, இவர் தெரிந்து தடுத்துவிட்ட செய்தி, நவாப் கேள்வியுற்று, இவரைச் சிறை செய்து வைத்தனன். அஃதறிந்த அன்பர் சிலர், அந்நியனால் சிறையுண்டு வாழ்தலைவிட உயிர் துறத்தலே தகும் என்று சீட்டொன்று எழுதி சுவாமிகளுக்குத் தாகச்செம்பில் மறைத்து வைத்து அனுப்பினர் அது படித்தறிந்த தேவர், அவ்விதம் செய்து கொள்ளுதலே உத்தமம் என்றெண்ணித் தாம் சிறையுண்டிருந்த மேல்மாடியிலிருந்துக் காற்றுவாரி வாயிலாக் கீழே குதித்தலும், போரூரான் காக்கும் கடமை இருந்தவாறு, வெறும் காயத்துடன் முள் பல தைத்து நைந்து, அவ்விடம்விட்டு நீங்கி, ஆறுகாடு சேர்ந்து, ஒரு மரத்தடியில் தங்கினர் போரூரான் தேவர் வடிவம் தாங்கி, அந்நாள் இரவு, கோவளம் நவாப் மனைவியின் வயிற்றிலும், ஆறுகாட்டு நவாப் மனைவி வயிற்றிலும் கனவிலையில் வேல் கொண்டு தீண்டி மறைதலும், இருவருக்கும் வயிற்று நோய் கண்டது. "காவலில் உள்ள சுவாமியே இது

செய்தது" என்று கோவளத்தாரும், "ஒரு தமிழ்ச் சுவாமி இது செய்தது" என்று ஆறுகாட்டாரும் கூற, இரு நவாப் ஏவலாளரும் சுவாமியைத் தேட முயன்ற போது கோவளத்தார் சுவாமி சிறையில் காணுமை கண்டு திகைத்தனர். கோவளத்தாள் வயிற்று நோய் மிகுதியாயிற்று. ஆறுகாட்டாரோ சுவாமியைக் கண்டழைத்துச் சென்று நவாப் மனைவிக்குக் காட்ட "இச்சாமியே இது செய்தது." என்று அவள் கூற, அவ்வாறு சுவாமி செய்திருத்தல் கூடாதென்று நவாப் உணர்ந்துச் சுவாமிக்குத் தக்க உதவி பல செய்வதாக வாக்களித்துத், திருநீறு பெற்றுத் தன் தேவியின் நோயினைப் போக்கிக்கொண்டும், சுவாமிக்கு ஒரு பணியும் செய்யாமல் நிற்க, மறு இரவும் போரூரான் வேல்கொண்டு அம்மாதைத் தீண்டிவிட்டனன் பின்னரே, ஆறுகாட்டு நவாப் சுவாமிகளுக்குத் **திருப்போரூர், தண்டலம்** ஆகிய இரண்டு ஊர்களையும் தான ஏடு செப்பில் எழுதித் தந்துத் திருநீறு பெற்றுத் தன் மனையாளுக்குத் தீர்வு தேடிக் கொண்டதோடு அமையாமல், தனக்குக் கீழ்ப்பட்ட கோவளம் நவாப் அறிய ஓர் ஒலையும் விட்டான். ஆறுகாட்டு நவாப் அளித்த விருதுகளுடன் போரூர் சேர்ந்த சுவாமிகளைக் கோவளத்தான் வந்து வணங்கி, அழைத்துச் சென்று, இயன்ற பொருளுதவி செய்துத் திருநீறு பெற்றுத் தன் இல்லாளின் வயிற்று நோயைத் தீர்வு கண்டான். இந்தத் தெய்வீக நிகழ்ச்சிகள் நேர்ந்த பின்னர் தேவரின் பெருமை நாடறிந்ததாயிற்று. அதனல் போரூர் புண்ணியர் நாடும் பேரூராகித் திகழ்ந்தது. தேவனர் ஆட்சிக் காலத்தில், திரணை மாளிகையும், உட்பிரகார மண்டபமும் கட்டப்பட்டன. **திருமயிலை—பூம்பாவை, வேலப்ப முதலியார்** பிள்ளைப்பேறு எய்தத் தேவனர் திருநீறு அளித்தமைக்கு நன்றி செயலாக, இருபத்து நாற்கால் மண்டபமும், கோபுர அடிப்படையும் நிறைவேறின. பின்னர், தேவனர் வள்ளையாரோடையான சரவண தீர்த்தத்தைப் பெருந்தடாகமாகச் செய்து, மலைமேல் சிறிதாக இருந்த

கைலாயநாதர் ஆலயத்தைப் பெரிதாக்கி வைத்தார். இதற்குப் பொருள் உதவியவர் **மயிலை தையநாயக முதலியார்** என்றவர். அவரே தந்த **இள்ளலூர், இடையன்குப்பம்** என்னும் சுரோத்திரிய வருமானத்தால் சிவாலயத்தில், பூசை நியதிக் கிரமமாயிற்று **குத்தம்பாக்கம் முத்து முதலியார்** தேர்நிலை மண்டபம், சத்திரம் இரண்டையும் கட்டி வைக்கக் **கன்னிகைப்பேறு நயனப்ப முதலியார்** தடாகம், வேடர்பறி மண்டபம், சத்திரம் ஆகியவை முடித்து வைத்தார். மேலும் தேவனூர் அரிதில் முயன்று, பூவிருந்தவல்லி மக்கள் பால் கலத்துக்கு ஒரு சம்மதித்த பாகம் நெல் மேரை பிச்சையாக நிரந்தர ஏற்பாடாக முடித்துக் கொண்டார். இவ்வாறு தேவனூர் தம் சுவாமிகளின் கட்டளையை வெகு திறமையுடன் செயற்படுத்தி வந்து, காஞ்சிபுரத்து வேதியப் பிள்ளை ஒருவருக்கு **முத்துக்குமார சுவாமிகள்** என்று பட்டமிட்டு ஒடுங்கினர். இவருக்குப் பின்னே வந்தவர் முறையே, **சிவசங்கர சுவாமிகள், முத்துக் குமார சுவாமிகள், சிதம்பரத் தம்பிரான், சிவசங்கரத் தம்பிரான், முருகேசத் தம்பிரான், முத்துக் குமார சுவாமிகள், சிவசங்கர சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள், சிதம்பர சண்முக சுவாமிகள்** என்போர் இந்தச் **சிதம்பர சண்முக சுவாமிகளே** பன்னிரண்டாவது பட்டமாக இப்பொழுது விளங்கிப் பற்பல நற்றொண்டுகள் ஆற்றிக்கொண்டு, என் கடன் பணிசெய்து கிடப்பதே என்னும் உயர்நிலையில் திகழ்கின்றார்.

---

# திருப்போரூர் சிவசங்கர சுவாமிகள்

## அநுக்கிரகம் வேண்டி விடுத்த

## வினு வெண்பாச் சஷ்டகம்.

சிவசங் கரத்தா தாய்! சிந்தை நெகிழத்,
தவமுதல்வன் தாள்பணிந்துத், தங்கிப் — பவமறுத்தீர்,
கூறுதிருப் போரூர்க் குவலயத் தோர்பதியில்;
ஆறுமுகம் என்பொருளாம்?! ஆறு.

ஆறுமுகம் யார்க்கும் அருந்துணை செய்யுமென்றுக்,
கூறியுமைக் கொம்பனையாள் கொற்றவன் — வீறுபெற்ற,
நீலமயில் வாகனன்பால், நின்றுபணி செய்யமிக,
ஏலவிட்டான் என்சொன்னுன்?! ஏது.

ஏதுகடா நேர்விடையால், எவ்வெவர்க்கும் மெய்ந்நூல்கள்
ஓதுகின்றூர் மாநிலத்தில், ஓதாமல், — சூதுவழி
யாதுரைத்தான்? ஐயாவோ! யாழிசையா கீதமதோ?
மீதுத்த மெய்யிசையோ?! மேது.

மேதினியில், தம்போன்றூர் மேவாத மெய்ந்நிலையை,
ஈதினிக் காண்பாயோ என்றுமக்கு, — வீதியிது,
மேநகரம் சென்றுசேர, மேவுவாய் நீயுமென்று;
நாநவிலா உய்த்தானே?! நன்று.

நன்றே சிதம்பர நாயகன்சொல் வார்த்தையால்,
வென்றே வெறியினோர் வேதைகள், — பொன்றூப்
புகழ்காத்தீர்; என்றூலும், புக்கவன்பின் ஏனே
அகழ்ந்தூர்ந்துச் செல்லவில்லை ஐயா?!

ஐயாவோ! துய்யாவோ! ஐங்கரனூர் காத்துவைத்த
தொய்யாத் திருப்போரூர் தொய்துவைத்த--மெய்யாவோ!
என்றே, சிதம்பரனூர் சென்றபின் ஏனழுதீர்?
என்றூே உரைப்பீர்?! சிவம்.

## திருப்போரூர் தேவாலயத் தற்போதயைப்
## பன்னிரண்டாம் பட்ட மூர்த்திகள்
## ஸ்ரீலஸ்ரீ திருப்போரூர் சிதம்பர ஷண்முக சுவாமிகள்
## இயற்றிவரும் திருத் தொண்டுப்
## பாராட்டுப் பதக்கம்

சிதம்பர ஷண்முகத் தேன்பெயரோய்! உம்பால்
சிதம்பரமும் ஷண்முகமும் சேர்ந்து, — இதமுறவே,
நின்றிலங்கும் பக்குவத்தால், நீர்தாம் பலவுழையும்
சென்றேற்றுச் செய்தொண்டும் சித்து! 1

சித்தர் பரம்பரையில், சீரியோய்! நீர்தோன்றி,
நித்தம், திருப்போரூர் நிர்மலமா, — வைத்தபூசை
வைப்பகலா மல்சிறக்க, வாய்த்தவிதம் நாடிநின்றீர்;
கைப்பகன்ற வான்புகழும் கண்டு! 2

கண்டவர் விண்டிலர் காணுக் கழல்வடிவம்;
விண்டவர் கண்டிலர்; வேழமுதல் — கொண்டேறும்
ஓங்கார கம்பத்தின் உச்சியின்மேல், பண்டுமுதல்,
நீங்காத தோர்பொருளே நின்று! 3

நின்றுதி ஊழிமுதல், நித்தியமாம் செம்பொருள்தான்,
நின்றித் திருப்போரூர் நீங்காமல், — நன்றுமது,
நாடுதொண்டு ஏற்பதனுல், நாயகரே! கண்டதனின்,
பீடுவிண்டுப் பேசுதலும் பேறு! 4

பேறுபலப் பொன்முதலாப் பெற்றுபலர் வாழ்கின்றூர்;
நீறுபூசிப் போரூர் நிறையழகன் — வீறுதல
ஆலயத்தே; அக்கால், அயராமல், நீரிழைத்த,
வாலிதாய வான்பணியை வாழ்த்து! 5

வாழ்த்துகின்றுன் பாரீர்! வழிமுதலாம் உம்தலைவன்;
சூழ்த்துகின்றுன் பாரீர்! சுயம்பது — போழ்ந்திடாமல்,
ஐக்கியம் அங்கலிங்கம் ஆயவன்; இம்மாலை
ஆக்கிய ஆர்ச்சிதம் ஆறு! 6

## திருப்போரூர்—சிதம்பர சுவாமிகள் அருளிச்செய்த

## மதுரை மீனாட்சியம்மை கலிவெண்பா.

---

### காப்பு

அங்கயற்கும் மாற்கும் அரியபெருமான் இடஞ்சேர்
அங்கயற்கண் ணம்மைக் கணியவே—அங்கயத்தின்
மாமுகங்கொள் கோமானை வாழ்த்திக் கலிவெண்பா
நாமுகந்து பாடுவோம் நன்கு.

### கலிவெண்பா

சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
காராரும் மேனிக் கருங்குயிலே—ஆராயும்

வேதமுத லாகின்ற மெய்ப்பொருளே மின்னொளியே
ஆதி பராபரையே அம்பிகையே—சோதியே

அண்டரெல்லாம் போற்றும் அரும்பொருளே யாரணங்கே
எண்டிசைக்குந் தாயான ஈஸ்வரியே—தெண்டிரையில்

வந்தஅமு தேயென்று மாறும வேலினைப்பார்
சிந்தைதனி லேயுறையுஞ் செல்வியே—அந்தமிலா

மாயோன் தனக்கிளைய வல்லியே மாமயிலோன்
தாயே பராபரையே சங்கரியே—தூயவொளி

மன்னுங் கயிலாச மாமயிலே மேருவெனும்
பொன்னங் கிரியுடைய பூங்கொடியே—அன்னமே

அட்டகுல வெற்பாய் அமர்ந்தவளே ஆதிஅந்தம்
எட்டெட்டுந் தானாய் இருந்தவளே—முட்டஎங்கும்

அவ்வெழுத்தாய் நின்ற அரும்பொருளே ஆரணங்கே
உவ்வெழுததாய் நின்றதொரு உண்மையே—எவ்வெழுத்துந்

தானாகி நின்றதொரு தற்பரையே யெவ்வுயிர்க்கும்
ஊனாகி நின்றதோர் உத்தமியே—கோனாய்ப்

படியளக்க மால்பார் பதினுன்கும் ஒக்க
அடியவரை யீடேற்றும் அன்னுய்—முடிவிலா

ஓங்காரத் துட்பொருளே உற்றநவ கோணத்தில்
ரீங்காரந் தன்னில் இருப்பவளே—பாங்கான

முக்கோணத் துள்ளிருக்கும் மூர்த்தியே மூவிரண்டாஞ்
சட்கோணத் துள்ளிருக்குஞ் சத்தியே—மிக்கபுகழ்

எண்ணிரண்டாங் கோட்டில் இருப்பவளே எவ்வுயிர்க்கும்
பண்ணிசைந்த பாட்டின் பழம்பொருளே—விண்ணுலகின்

மேற்பட்டங் கூடுருவி மேலாகி நின்றதொரு
நாற்பத்து முக்கோண நாயகியே—சீர்ப்பெற்ற

பஞ்சகோ ணத்திருந்த பைங்கிளியே பார்முழுதுந்
தஞ்சமது வாகிநின்ற தையலே—செஞ்சொல்மறைச்

சொல்லே பொருளே சுவையே அறுசுவையே
எல்லாப் புவிக்கும் இறைவியே—தொல்லை

எறும்பு கடை யானை தலை எண்ணில் உயிர்க்கும்
உறும்பொருளாய் அங்கங் குணர்வாய்ப்—பெறும்பயனுய்

ஆறாறு தத்துவமாய் ஐயிரண்டு வாயுவாய்க்
கூறுய்த் திசைபத்தின் கூட்டமாய்ப்—பேருன

அஞ்செழுத்தாய் எட்டெழுத்தாய் ஐம்பத்தோகாக்கரமாய்ப்
பஞ்சவர்ன மாய்ப்பஞ்ச தேவதையாய்—வஞ்சமற்ற

ஆருதா ரப்பொருளாய் ஐயைந்தாய் ஐம்மூன்றுய்
வீருன சக்கரத்தின் மின்னொளியாய்க்—கூருங்

கருவிகர ணுதிகளாய்க் கைகலந்து நின்ற
பெரியதொரு மாயைப் பிரிவாய்—உரியதொரு

சோத்திரத்திற் சத்தமாய்த் தொக்கிற் பரிசமாய்
நேத்திரத்திற் பேருருவாய் நீக்கமிலா—நாத்தலனின்

மெத்திரத மாய்மூக்கின் மேவுகந்த மாய்ப்பிறவாய்
மத்த பிரமத்த வயிரவியாய்ச்—சுத்த

துரியமதாய்ப் பின்னுந் துரியாதீ தத்தின்
அரிய சிலம்பொலியும் ஆர்ப்பத்—தெரிவரிதாய்

நாடுதனிற் சென்றிரந்து நறபவுரி கொண்டுதொந்தம்
ஆடுகின்ற பார்ப்பதியே அம்பிகையே—நாடிக்

களங்கமற வேதான் கரும்புருவந் தன்னிற்
பளிங்கொளியாய் நின்ற பரமே—வளம்பெறவே

கண்ணிரண்டி னுள்ளே கருணைத் திருவடிவாய்ப்
புண்ணியமாய் நின்றருளும் பூவையே—பண்ணமைந்த

நாசி நுனிமேல் நடுவெழுந்த தீபமாய்
ஓசைவிந்து நாதாந்தத் துட்பொருளாய்—நேசமுடன்

அஞ்சு முகமாய் அகண்டபரி பூரணமாய்ப்
பஞ்சபூ தம்மான பைங்கிளியே—கஞ்சமலர்ப்

பாத மிரண்டாகி பச்சைநிறந் தானுகி
ஆதிமுத லாகின்ற அம்பரமே—தீதிலா

நெற்றிதனிற் கண்ணுகி நிட்களரூ பப்பொருளாய்
உற்றவெளி யாகின்ற வுத்தமியே—பத்திநிரை

ஆகாயத் தின்னெளியாய் அந்தரத்தின் ரூபமாய்
மேகாதிக் குள்ளே விளைபொருளாய்—வாகாம்

இடைபிங் கலையாய் இரண்டுக்கும் எட்டாக்
கடையுஞ் சுழிமுனையாய்க் காலாய்—மடலவிழ்ந்த

மூலாதா ரத்தொளியாய் மும்மண்ட லங்கடந்து
மேலாதா ரத்திருந்த வெண்மதியாய்ப்—பாலூறல்

உண்ணுஞ் சிவயோக வுத்தமியே மெய்த்தவமே
பண்ணுமறை வேதப் பழம்பொருளே—எண்ணரிய

மெய்ஞ்ஞான வித்தே விளக்கொளியே மெய்ச்சுடரே
அஞ்ஞான மேயகற்றும் அம்மையே—பைந்நாகம்

பூண்டசிவ ஞரிடத்துப் பூங்கொடியே பாங்குடனே
தாண்டவமா டப்பவுரி தாளமொத்தி—ஆண்டியுடன்

ஆடுங்கூத் தாடிச்சி யம்மனைபந் தாடிச்சி
தேடியும்மால் காணுச் சிவசத்தி—நாடியுனைப்

போற்றும்அடி யார்கள்வினை போக்கியே அஞ்சலென்று
தோற்றுகின்ற அம்மை துடியிடைச்சி—ஏத்தரிய

பச்சை நிறத்தி பவளக் கொடியிடைச்சி
கச்சைப் பொருமுலைச்சி கைவளைச்சி—கொச்சை

மலையரையன் பெற்ற மலைச்சி கலைச்சி
நிலையறிவே தாந்த நிலைச்சி—அலையாத

அன்னநடைச்சி யருமறைச்சி யாண்டிச்சி
கன்னன் மொழிச்சி கருணைச்சி—பன்னுதமிழ்

வாய்ச்சி சடைச்சி வடிவுடைய மங்கைச்சி
பேய்ச்சி இளமுலைச்சி பேதைச்சி—காய்ச்சியபால்

வெண்ணெய் மொழிச்சி வெளிச்சி வெளியிடைச்சி
அண்ணுபுரந் தீயிட்ட அம்படைச்சி—நண்ணிலரும்

கொப்புக் குழைச்சி குவளைப் பொருவிழிச்சி
அப்புச் சடைச்சி சிவாகமச்சி—மெய்ப்பாங்

கருப்புச் சிலைச்சி கலைச்சி வலைச்சி
மருப்புத் தனத்தி மவுனத்தி—பொருப்பிடத்தி

தாமப் புயத்தி சமர்த்தி தருமத்தி
நாமச் சிவபுரத்தி நாரணத்தி—தேமருவுங்

காரணத்தி பூத கணத்தி தனபார
வாரணத்தி அட்டதிக்கு மாரணத்தி—பூரணத்தி

பாத பரிபுரத்தி பங்கயத்தி செங்கரத்தி
சோதி மணிநிறத்தி சொப்பனத்தி—பாதிமதி

சூடுகின்ற சொக்கருடன் துய்யபுலித் தோலுடுத்திக்
காடுதனில் வீற்றிருக்குங் காரணியே—நாடறியுஞ்

சேணிச்சி நல்ல சிறுத்தொண்டன் பிள்ளையறுத்
தூணிச்சி நஞ்சமுதாம் ஊணிச்சி—யாணிச்சி

பாசாங்கு சத்தி பரத்தி பருப்பதத்தி
காசாம்பூ மேனிக் கனதனத்தி—மாசிலா

அம்பரத்தி ஐம்புலத்தி யானதொரு வேதாந்த
உம்பருக்கும் எட்டாத வுத்தமத்தி—செம்பொன்வளைச்

செட்டிச்சி வைகைதனிற் சென்றுவெட்டி மண்சுமந்த
ஒட்டச்சி பூதியணி யுத்தளத்தி—எட்டதிக்கு

மின்னே விளக்கே விலையில்லாச் சிவரத்னப்
பொன்னே நவமணியே பூங்கிளியே—இன்னமுதே

மாணிக்க வல்லியே மாமரக தப்பணியே
ஆணிக் கனகத் தரும்பொருளே—மாணுற்ற

சிங்கார வல்லியே செம்பொற் சிலைவளைத்த
கங்காளற் கன்பான கண்மணியே—மங்காத

தெய்வக் குலக்கொழுந்தே செம்பட்டுடைத்திருவே
ஐவருக்குந் தாயாய் அமர்ந்தவளே—மெய்யருக்குச்

சித்திகொடுக்குஞ் சிவானந்தி அன்பருக்கு
முத்திகொடுக் குஞ்ஞான மூர்த்தியே—எத்திசைக்கும்

தாயகமாய்ச் சூழ்தா வரசங்க மம்விளக்குந்
தூயசுடர் மூன்றான சூக்குமமே—வேயீன்ற

நித்திலமே கற்பகமே நின்மலமே நன்மணியே
சுத்தபரி பூரணியே சுந்தரியே—அத்தருடன்

வாதாடும் மங்கையே மாமந்த்ர ரூபியே
வேதாந்தி யேகமல மெல்லியலே—நாதாந்த

மாயே சுவரியே மங்கையே மாமறைக்குந்
தாயாகி நின்ற சரஸ்வதியே—காயாய்ப்

பழுத்த பழமாய்ப் பழத்திரதந் தானாய்
முழுத்த பரானந்த முதலாய்—எழுத்துமுதல்

ஆறுசம யங்களுக்குள் அவ்வவர்க்கும் வெவ்வேறாய்
வேறு பலரூப விகற்பமதாய்க்—கூறரிதாய்

67295 Q23x(ws) 3N5

அங்கங்குந் தானுய் அமர்ந்தவளே ஆதியந்தம்
எங்கெங்குந் தானுய் இருந்தவளே—திங்கள் நுதல்

அஞ்சுகமே தேனே யணங்கே யமுதமொழிக்
கிஞ்சுகமே பிஞ்சுமதிக் கிள்ளையே—கொஞ்சுகுயில்

கன்னி திரிசூலி கபாலி சிவகாமி
மன்னு கவுரி மகமாயி—பொன்னின் மலர்த்

தாளி சதுரி சவுந்தரிமுக் கண்ணுடைய
காளி பகவதி கங்காளி—தூளியாத்

தக்கன் தலையறுத்த தத்துவத்தி தற்பரத்தி
அக்கினிகை யீர்ந்த அமர்க்களத்தி மிக்க புகழ்

வீரசத்தி மேருவினை வில்லா வளைத்தவொரு
பாரசத்தி வேதப் பராசத்தி—தாரணிகள்

கொண்டகா ரிச்சிக்குங் குந்தளத்தி மாமதனன்
சண்டைகா ரிச்சி சகலத்தி—துண்டமதிச்

செஞ்சடைச்சி கஞ்சுளிச்சி செம்படத்தி கங்கணத்தி
பஞ்சசத்தி கொந்தளத்தி பைம்பணத்தி—அஞ்சனத்தி

முத்துவடக் கொங்கைச்சி முல்லை மகிழ்நகைச்சி
பத்தரவர் நெஞ்சகத்தி பாரிடத்தி—சுத்தவெள்ளை

அக்கு வடத்தி அறம்வளர்த்தி அன்புடைச்சி
செக்கரிளம் பிறைச்சி செண்பகத்தி—தக்கமணி

ஓலைக் குழைச்சி உபதேச குண்டலச்சி
மாலைக் கழுத்தி மவுனத்தி—ஞாலமெல்லாம்

அக்கரத்தி பொக்கணத்தி அண்டபகி ரண்டத்தி
முக்கணத்தி மிட்களத்தி மோட்சத்தி—மிக்கபுகழ்

ஏகாக் கரத்தி இமயப் பருப்பதத்தி
நாகாதி பூண்டசிங்க நாதத்தி—வாகான

பத்மா சனத்தி பரிமளத்தி பாம்பணைத்தி
கற்பாந் தரத்தி கருநிறத்தி—விற்காம

வேடிச்சி நல்லதொரு மீனவனுக் கன்றுமுடி
சூடிச்சி கொக்கிறகு சூடிச்சி—நாடிச்சீர்

பாதந் தனைத்தேடும் பங்கயத்தில் வீற்றிருக்கும்
வேதன் தலையறுத்த வித்தகத்தி—நீதிபுனை

பாடகத்தி கீதப்ர பந்தத்தி வெள்ளிமன்றுள்
ஆடகத்தி கூடலுக்குள் ஆதியே—ஏடெதிரே

ஏற்றுவித்து முன்சமணர் எண்ணுயிரர்கழுவில்
வீற்றிருக்க வைத்தமறை வித்தகியே—நாற்றிசையும்

கொண்டாடப் பெற்றதொரு கோமளமே யாமளையே
தண்டா மரைத்திருவே தையலே—மண்டலங்கள்

எங்குமொத்து நின்றருளும் ஈஸ்வரியே மாமதுரை
அங்கயற்கண் நாயகியே அம்மையே—துங்க

ஒளியே பெருந்திருவே ஓதிமமே உண்மை
வெளியே பரப்பிரம வித்தே—அளிசேரும்

கொந்தளக பந்திக் குயிலே சிவயோகத்
தைந்தருவே மூவருக்கும் அன்னையே—எந்தம் இடர்

அல்லல் வினையெல்லாம் அகற்றியே அஞ்சலென்று
நல்லசவு பாக்கியத்தை நல்கியே—வல்லபத்தின்

ஆசுமதுரஞ்சித்ர வித்தார மென்றறிஞர்
பேசுகின்ற வுண்மைப் பெருவாக்கு—நேசமுடன்

தந்தென்னை யாட்கொண்டு சற்குருவாய் என் அகத்தில்
வந்திருந்து புத்தி மதிகொடுத்துச்—சந்ததமும்

நீயே துணையாகி நின்றிரட்சி அங்கயற்கண்
தாயே சரணஞ் சரண்.

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் அருளிச்செய்த

திருப்போரூர்ச் சந்நிதி முறை

# "நித்திய பாராயணப் பத்து"

## மாலை

1

நாயேனுன் சீரடிக்கு நன்கல்ல செய்தாலும்
பேயேன் இழைத்த பெரும்பிழையை—நீயே
பொறுத்தாள்வ துன்கடனும் போரூரா! என்னை
ஒறுத்தா லெனக்கார் உறவு.

2

இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லேன் நாயினேன்—சொல்லறத்தின்
ஒன்றேனும் இல்லேன் உயர்ந்ததிருப் போரூரா!
என்றேநான் ஈடேறு வேன்.

3

ஐம்பொறியாற் போகம் அயின்றாலும் நாயேனுன்
செம்பதுமத் தாளிணையே சிந்திக்க—உம்பருக்குங்
காணஅரி தாம் இன்பங் காணத்தென் போரூரா!
பூண அருளே புரி.

4

ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே!—நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற ஆறுநீ பேசு.

5

பேய்போம் துயரம்போம் பித்தம்போம் போகாத
நோய்போம் மிடிபோம் நுவலுங்கால்—தாய்போல
நன்னிதியைப் போல நயந்ததிருப் போரூரன்
சன்னிதியைக் கண்டளவே தான்.

6

திருவடிக்கே தோன்றுஞ் சிறியேன் துயரம்
ஒருவருக்குந் தோன்றதென் னுள்ளே—சருவினை
எந்நாளும் வாட்டும் இடர்களையப் போரூரா
நன்னுளின் நாளா நயந்து.

7

ஆசையும் அன்பும் அபிமான மும்உனது
பூசையிலே வைக்காது பொய்க்காளாய்ப்—பேசரிய
பெண்ணாசை யாதி பிடித்துழன்றேன் போரூரா!
எண்ணாது நின்னை யிருந்து.

8

நோயுற் றடராமல் நொந்துமனம் வாடாமற்
பாயிற் கிடவாமற் பாவியேன்—காயத்தை
ஓர்நொடிக்குள் நீக்கியெனை யொண்போரூர் ஐயாநின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து.

9

கன்றழைக்கும் முன்னே கருதிவரு மாப்போல
நின்றழைக்கும் நாயேற்கு நேர்தோன்றி -- ஒன்றினுக்கும்
அஞ்சாதே வாவென் றழைப்பாய்தென் போரூரா!
எஞ்சாத பேரருளா லின்று.

10

ஆறு முகம்வாழி! ஆறிரண்டு தோள்வாழி!
தேறுபதம் வாழி! யிரு தேவிமார்—வீறுபுடை
வாழி! வேல் வாழி! மயில்வாழி! போரூரர்
வாழி! சகம்வாழி! மகிழ்ந்து.

உ

அருணகிரிநாதர்

# திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே!
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே!
கூறும் அடியார்கள் வினைதீர்க்கும் முகம் ஒன்றே!
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே!
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே!
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே !!

19 SEP 1957

பார்க்கர் அச்சகம், 11, பந்தர் தெரு, சென்னை-1.

PUBLIC
19 SEP 1957
MADRAS

உ



## வாழ்த்து

---

நரையோர் புகழ்வேம் படிவேழம்,
சந்நி, கைலைப்பி ரான், பிரணவ
வரை சூழ் போரி: வள்ளி, தெய்வ
யானை, மணாளர்; பதம் வாழி!
குருவாம் சாந்த லிங்க வள்ளல்
குமார தேவர் நிலைவாழி!!
அருள்கூர் சிதம்ப ரத்தேவர்
ஆதீ னமும்அன் பரும்வாழி!!!